கின்றேனென்ன அதற்கு அவள் அவருடையவரலாற்றைக்கேட்க இந்திரன்சொல்வதாயினன்.

தேவர்கள் திருப்பாற்கடலைக்கடைந்த காலத்திற்பிறந்த அமுதத்தைக்கொடிய சுபாவமுடைய அசுரர் உண்டுவாழாதபடிக்குமகாவிஷ்ணுவானவர் மோகினி அவதாரம் எடுத்தனர். பின்பரமசிவனும் மோகினியாகவந்த பரந்தாமனுங்கலந்து இன்பமுற்றகாலத்துக் காமவெப்பத்தினால் இருவருக்கும் வியர்த்தொழுகியஜலமானது பெருகிக்கண்டகிநதியெனப் பேர்பெற்று விளங்கியது. அந்நதியில்தோன்றிய சாளக்கிராமங்களாகிய கீடங்களைமகத்துக்களெடுத்து விஷ்ணு சொரூபமாகக்கருதிப்பூசித்துவருவர். பின் அவர்களிருவருக்கும் நமதையனாகிய அரிஹரபுத்திரர் பிறந்தனர். அத்தேவர் உன்னை இரட்சிக்கக்கடவரென்று இந்திரன் அப்புத்திரனைத் தியானித்து நிற்க, அத்தேவர் கிருபையுடன் அவருக்குப் பிரசன்னமாகி வந்து ஓ இந்திரனே! நீகயிலைபோய் வருமளவும் நாம் இந்திராணியைக் காப்பாற்றிக் கொடுப்போமென்று தமதுசேனைத்தலைவனாகிய மகாகாளனை அவளுக்குக்காவல் வைத்துமறைந்தனர் பின் தேவராஜன் களிப்புடன் வந்த தேவர்களுடன் பரமனெழுந்தருளி யிருக்கும் கயிலைக்குச்சென்று முதல்வாயிலில் வீற்றிருக்கும் நந்திதேவரை வணங்கிச் சங்கதிகளை விண்ணப்பஞ் செய்ய அவர் பரமேஸ்வரன் சனகாதிகளுக்குக் ஞானயோகநிலையைக்காட்டி ஏகாந்தத்தி லிருப்பதாயும் அவர்கள் துன்பம் ஒழியுங்காலம் சமீபிக்கவில்லை யென்றும் சொல்லிப்பின் இவர்கள் இராக்ஷதப் பாதகராற் படுந்துன்பங்களுக்கு இரங்கி முகவாயில் மண்டபத்தில் ஒரு பாரிசத்திற் காத்திருக்கும்படிக்கு உத்தரவு கொடுத்த பிரகாரம் அவ்விடம் தேவர்கள் தங்கிப்பரம சிவத்தைத் துதித்துக்கொண்டிருந்தார்கள்.

இது சமயத்தில், சூரன் தங்கையான அசமுகி யென்பவள் காமலாகிரியாற் கற்பின் வரம்பைக்கடந்து தன்னை எதிர்ப்பட்ட தேவர் மனிதர்களை யெல்லாம் வலிதிற் பற்றி அவர்களுடன் கூடிக்களித்து எங்கனும் உலவிச் சீகாழித்தலத்திற் சிறந்து விளங்கிய பூஞ்சோலையைக் கண்ணுற்ற வளவில் இத்தகைய சிங்காரவனப்பத்தினை நான் எவ்வுலகத்திலும் பார்த்ததே இல்லை என்று தோழிகளுடன் மிகவும்

ஆனந்தமாய்ப் பேசிக்கொண்டு அதிற் பிரவேசித்துப் பு[illegible]
க்கொய்து விளையாடி இவ்வனத்தைப் படைத்தவர்களையும் [illegible]
ண்டுமென்று தேடி வருநகையில் தன் கொழுநன் குறித்துப் போனகா
ரியம் சித்தியாதற் பொருட்டுத்தன் இஷ்டதேவதையை நாடித் தவ
ஞ்செய்து கொண்டிருக்கும் இந்திராணியைக்கண்டு அவள் இன்னா
ரென்பதை யறிந்து கொண்டு பாங்கிகளைப் பார்த்து அடிதோழி
காள்! இவளை இப்போதே பிடித்து எனது தமயனாகிய சூரபதுமனி
டம் கொண்டு போய் அவன் விரகதாபம் தீர்த்தலையும்படி கொடுப்
பேனென இடிமுழக்கம்போற் பேசிச் சமீபித்து வருஞ்சமயத்தில்
இந்திராணியானவள் எமன் வந்தாற்போலத் திடுக்கிட்டு எழுந்து அப்
புறம் போக எத்தனப்படுகையில் அரக்கியானவள் அவளை நோக்கி
அடீ! இந்திராணி! நில்லு! நில்லு! என்று அவள் சமீபத்தில் வந்து
அவள் காதலனை இழிவாகப்பேசி அவனை விட்டுத் தனது தமயனை
அவள் அடையவேணும் என்பதான பல அநீதிவாக்கியங்களை எடுத்து
ப்போதித்தனள். அக்கொடிய சொற்களை இந்திராணி கேட்டமாத்தி
ரத்திற் செவிகளிற் காய்ச்சிய நாராசத்தைச் சொருகியது போலப்ப
தைபதைத்து வருந்திக்காதுகளைப் பொத்திப்பரமனைத் தியானித்து
எதிரில் நிற்கின்ற கொடியவளைப்பார்த்து உனக்குச்சம்பவிக்கப்போ
கும் கெடுதியை யாவரால் அளவிட்டுச் சொல்லமுடியும்! நீ பிறந்தமர
பினையும் மேல்வரும்பழிபாதகங்களையும் எவ்வளவேனும்பகுத்து நிதா
னித்தவளில்லை! என்நாயகனிடத் தல்லது மற்ற எவராயிருந்தாலும்
அவர்களிடத்தில் இச்சை கொள்ளாத எனக்கு இடையூறாகிய இழி
வானநடக்கையைப் போதிக்கத்துணிந்தாய். ஆதலால், உன்வம்மிசம்
விருத்தியடைதற்குக் காரணமில்லை. மேலும் நான் தனியாயிருப்ப
தாய் எண்ணவேண்டாம். நீ விரைவில் இவ்விடம் விட்டுப் போய்விட
க்கடவை என்றனள். அதைக்கேட்டு, அக்கொடியவள் இந்தக்ஷணம்
உன்னைக்கொன்று தின்று கோபந்தணிவேன். ஆனால் எனதமயன்
உன்னிடத்தில் அதிக இச்சைப்பட்டிருக்கும் காரணத்தினாற் பொறு
த்தேன். இந்நிமிஷமே உன்னைப் பலவந்தமாய்ப் பிடித்துக்கொண்டு
போய் அவனிடம் சேர்க்கிறேனென்று இந்திராணியின் கரத்தைப்
பற்றியிழுத்தப்போது அவள் பூனைவாயிற் பட்டகிளியைப்போல் அல
றுவதாகிச் சுற்றிலும் பார்த்து யாவரையும் காணாதபடியால் திகிற்
கொண்டு புலம்புவதாயினள். ஓ! கர்த்தனே! இப்பாதகி பலவந்தமாய்ப்

பிடித்திழுத்துத் தொந்தரிக்கின்றாள்! விடுவிக்கவருவாய்! ஸ்ரீ மகாவிஷ்
ணுவுக்கும் பரமசிவத்திற்கும் உதித்த அய்யனே! ஓலம்! பொய்யருக்
குப் பொய்யனாய் மெய்யருக்கு மெய்யனாய் விளங்குந் தினதயாபர மூர்
த்தியே! ஓலம்! என்று இவ்வாறு பலபல விதங்களாய் முறையிட்ட
காலையிற் காத்திருந்த மகாகாளர் கேட்டு ஐயையோ! எங்களையனைக்
குறித்துக்கூவி இப்பதிவிரதை ஓலமிடுவதோ என்று உடைவாளைக்கர
த்திற் பற்றிச் சூழற்றிப்பாய்ந்து அரக்கியின் முன் வந்து தேவராஜன்
பத்தினியை வஞ்சித்தெங்கே கொண்டு போகின்றாய்! நில்லு! நில்லு!
என்றதட்டி ஓபதிவிரதாசிரோமணியே! உன்னைத்தொட்ட கொடிய
பாதகியின் கரங்களை இதோவெட்டித் தள்ளிவிடுகின்றேனெனத் தயி
ரியங் கூறியகாலையில் அசமுகி விழிகளில் தீப்பொறிதெறக் கோபித்
துச்சிறிக்கரத்திற் பிடித்திருந்த சூலத்தைச் சுழற்றி மகாகாளர்மார்
பிற்கு இலக்காக எறிந்தனள். அதுதன்பேரில் வருவதை வீரன்கண்
டு தன் கைவாளினால் அதை இருதுணிவாக வெட்டித்தள்ளினார்.
அசமுகி சீறி அருகில் நின்றதோழியின் கரத்திலிருந்த சூலத்தை
வாங்கிக்கொண்டு வீரமகாகாளர் மார்பிற்குத்த நினைந்து மாறி
மாறி வாதுகொடுக்கும் போது அக்குறிப்பைத் தெரிந்துவீராதி
வீரன் தமது வாளினால் ஓங்கிவீசி அச்சூலத்தைத்துகட் படுத்தினார்
பின் அவள் ஓர்பாநுவசத்தைப் பிடுங்கி அவர் பேரிற் சுழற்றி யெறிந்த
னள். அது வேகமாய் வரும்போது மகாகாளர் நகைத்துத் தமது வே
ற்றிவாளினால் அதை வெட்டித்தள்ளிச் சிங்கநாதஞ் செய்தனர். அந்த
க்ஷணத்தில் அசமுகி இவனை வெல்வது அரிதென்றெண்ணிக் கபட
மார்க்கமாய் இந்திராணியைக் கொண்டு போய்விடுவோ மென்று
அவளைத்தன் கரத்திற் பற்றினவளாய் அதிவேகமாய்ச் செல்வதை
மகாகாளர் கண்டு உடனே அவளை பின்பற்றி அவளுடைய கூந்தலைத்
தமது ஒருகரத்தாற்பற்றி மற்றோர் கரத்தினால் உடைவாளையுருவி
இந்திராணியைப் பற்றியிருந்த அரக்கியின் வலது கரத்தைத் தோள்
வரையில் தேவர்கள் கொண்டாடும் படிக்கு வெட்டித்தள்ளி இந்திரா
ணியை அப்புறப்படுத்தி அசமுகியைத் தமது காலினால் உதைத்துத்
தள்ளிப் பின்பக்கத்தில் நின்ற தோழியைப்பார்த்து உனக்கும் கையிரு
க்கலாகாதென்று கொய்து தள்ளிவிட்டனர். உடனே இருவரும் ஓ
வென்றலறிப் பூமியில் விழுந்தனர் அசமுகியானவள் மூர்ச்சித்துத்
தெளிந்தெழுந்து தனக்கு நேர்ந்த துன்பத்திற்காகச் சமுத்திரத்தைப்

போலக் கோ கோ வெனத்தனது இடது கையைப் பூமியில் அடித்துக்கொண்டு "அழுது" இந்திராணியைப்பார்த்துப் பற்களைக்கடித்துச் சொல்லுவாள். உன்னையும் உன்புருஷனையும் எவ்விடத்தில் ஒழித்திருப்பினும் தாதாற் பிடித்துவரச்செய்து மாறாத சிறையில் அடைப்பித்து வருத்திக்கடைசியிற் கொல்லுவிப்பன். நான் அப்படிச் செய்யாமற் போவேனே யாகில் நான் சூரன் தங்கையுமல்ல என்மார்பிலிருப்பது கொங்கைகளுமல்ல எனச் சபதம்செய்து போயினள்.

நாரதமகா முனிவரானவர் இந்தச்சங்களைக் கொஞ்ச நேரமும் மனதில் அடக்கி வைத்திருக்கக் கூடாதவராய் உடனே அவர் தேவேந்திரனை வந்து கண்டு நடந்தவைகளை எல்லாம் உரைத்து விட்டனர். அப்போது தேவராஜன் மனக்கவலையுற்றுத் தேவர்களுடன் நந்திதேவரிடத்திற் போய்த்தனக்கு உற்ற துன்பத்தைச் சொல்லி வருந்தி இன்னம் சிலகாலம் தவம்செய்து பின்கர்த்தனைக்காணும்படிக்கு இவ்விடம் வருகின்றேனென விடை பெற்றுத் தனதுதிருத் தேவியாகிய புலோமிசையை வந்துகண்டு அவள் துக்கத்தைப் போக்கிக் காத்து இரட்சித்த மகாகாளரைப் போற்றி யனுப்பியபின் இந்திரனும் புலோமிசையும் இனிநாம் இந்தவிடத்திலொருக்ஷண நேரங்கூட இருக்க லாகாதெனச் சூரனுக்குப் பயந்து தேவர்களுடன் மகம்மேருச் சாரலிற்போய்ப் பதுங்கி யிருந்தனர்.

இது சமயத்திற் கையறுப்புண்ட அசமுகியானவள் தன்தோழியுடன்வீரமா மயேந்திரப் பட்டணத்திற் பிரவேசித்துக் கண்டவர்பல விதங்களிற் பேசி ஆச்சரியப்பட வீதி வழிச்சென்று இராஜாதிராஜன் கொலு வீற்றிருக்கும் சபாமண்டபத்திற் பிரவேசித்துத் தனதுதமயனாகிய சூரபதுமன் முன் அடித்து அலறிவீழ்ந்து இந்திராணியைப் பிடித்து வரும்வேளையில் தேவேந்திரனுடைய ஏவலினால் மகாகாளனென்பவன் இவ்வித ஆக்கினைசெய்து விடானென்று பல பல விதங்களெல்லாம் கூறிப்பிரலாபித்தனள். அப்போது சூரன் வடவைபோற் கொதித்து விழிகள் சிவந்துதீயிறைக்கப்புருவம் நெற்றியிலேறக் கோபமாகித் தேவரனைவரையும் கொல்ல நினைந்தவனாய்ப் பல கோபவார்த்தைகள் பேசியகாலத்துப் பானுகோபனென்பவன் எழுந்து அவன் பாதங்களிற் பணிந்து யான் தேவேந்திரனை அவனுக்குப் பணிவிடை

செய்திருக்கும் தேவர்களுடன் பிடித்து வரக்கடவென்ன வருவிவாங்கிச் சென்றனன். பின் சூரபதுமன் பிரமனைக் கொண்டு வெட்டுண்டகைகளை முன்போற் படைக்கும்படி செய்தனன். அப்படியே அவர்களிருவரும் கைகளைப்பெற்ற பின் சூரனவன் தன் தங்கையின் தோழியைப் பார்த்துப் பானுகோபனுடன் நீ சென்று கரங்களைத் துண்டித்தவிடத்தைக் காட்டுவாயென அனுப்பினன்.

பின்பு சூரியர்முதலிய நவக்கிரகங்களையும் இராசிகள்முதலிய நட்சத்திரங்களையும் தசவாயுக்களையும் இருதுக்கள் முதலியோரையும் இந்நிமிஷம் நமது முன்கொண்டு வருவீர்களெனச் சூரன்சாரணர்களுக்குக் கட்டளையிடுமுன் அவர்கள் ஓடி எல்லோரையும் அவ்விதமே கொண்டுவந்து சேர்த்தார்கள். அப்போது சூரன் அவர்களை மிக வெகுண்டு நோக்கி என் ஆசைத்தங்கையின் கரத்தை வெட்டியகாலத்தில் அதற் கொருதடை செய்யாமல் நீங்களெல்லோரும் சும்மா பார்த்திருந்த காரணமென்ன வென்று கேட்டு அவர்களை யெல்லாம் கடுஞ்சிறையிற் கொண்டுபோய் வைக்கும்படிக்கு உத்தரவு செய்தனன். பின் திக்குப்பாலகரை வருவித்து நமது ஏவலுக்கு அஞ்சிஓடிய தேவேந்திரனையும் அவன் மனைவியையும் நீங்கள் கண்டு பிடித்து நமக்குக் கூற முடியாமல் திசை காவலரெனப் பேர்பூண்டு மாயமாய் ஏய்த்துத் திரிவது வெகுநேர்த்தியென்று அவர்களைக் கோபித்துத் தமது வயிரவாளை உருவித்தண்ட நாயகர் கையிற் கொடுத்து அவர்களின் உறுப்புகளைப் பலவிதங்களிற் சேதம் செய்யும்படி கட்டளையிட்டுப் பிரமதேவனைப் போய்வரச் செலவுகொடுத்த காலையில் அவர் சூரனை நோக்கிப் பற்பல ஆசிகள் கூறி ஓ பவுத்திரரே! க்ஷமித்துக் கேட்டருளுக! சூரிய சந்திராதியராகிய நவக்கிரகங்கள் இருதுக்கள் இராசிகள் முதலியோர் உமது பணிவிடைப்படிக்கு நடந்துகொள்ளப்பட்டவர்கள். இவர்கள் சஞ்சரியாமல் உலக ரக்ஷணார்த்தம் நடவாதென வேண்டிக்கொள்ளச் சூரன் அவர்களை விடுதலை செய்யும்படி கட்டளையிட்டான்.

இவை நிற்க, சூரியனைச் சிறையிலிட்ட வீராதி வீரனாகிய பானுகோபனென்பவன் யுத்தசன்னத்தனாய் அனேகம் வெள்ளம் சயினியங்களுடன் புறப்பட்டு இந்திரனையும் அவன் மனைவியையும் எங்கும் தேடிக்காணாமல் தேவலோகத்தை நோக்கிச் சென்று அதை முற்றிக்கை

யேபாட்டுக் கொண்டான். அதை அவ்விடத்தில் அரசு செலுத்தி யிருந்த இந்திரன் குமாரனுகிய சயந்தனென்பவன் தெரிந்து தப்பியோடு வதிலும் யுத்தம் செய்து வெல்வதே மேன்மை என்பதாகச் சகலசயி ளியங்களுடன் தானும் அயிராவதத்தில் ஏறிக்கொண்டு சண்டைக்குச் சென்றுன். அப்போது இரண்டு சேனைகளும் கைகலந்து பிரமாத யுத்தமானதில் தேவர்களை அசுரர் சிறைபிடித்து விட்டார்கள். பின் இந்திர குமாரனுகிய சயந்தனும் பலவாகப் போராடிப் பானுகோப னுற் சாவுக்குச் சரியான மூர்ச்சையடைந்த போது அவனையும் சிறை யாகப் பிடித்துக் கொண்டு பொன்னுலகத்தை அக்கினிப் பிரவேசப் படுத்திச் சாம்பலாக்கித்தனது பிதாவாகிய சூரனிடம் திரும்பிவந்து சிறையிற் கொண்டுவந்த சயந்தன் முதலிய தேவப்படைகளை ஒப்பு வித்து இந்திரனை அவன் மனைவியுடன் காணக்கூடவில்லை என்றனன். சூரன் தன்குமாரனை மெச்சிப்பின் தேவர்களைத் தீயெழப்பார்த்துப் பற்களைக் கடித்துத் தண்ட நாயகரைக் கூவியழைத்து இவர்கள் உறு ப்புகளைச் சின்னபின்னப்படக் கண்டித்து விடக்கடவீர்களெனக் கட் டளை யிட்டனன். அப்படி அக்கொடியவர் தேவர்களின் அவயவங்களை ப்பலபல விதங்களாய்க் கோரமாய் வெட்டிச் சேதப்படுத்திய காலத் தில் அவர்கள் அமுதம் உண்டவலியினுல் மீளவும் அவ்வவ்வ வயவ ங்கள் வளர்ந்து சம்பூரணம் பெற்று விளங்குவதைச் சூரன் கண்டு அமுதவலிக்கு அதிசயித்து அத்தேவர்களை யெல்லாம் விலங்கிட்டுக் கொடிய காவலிற் போடும்படிக்கு உத்தரவு செய்து மகிழ்ந்திருந்தான். முன் யுத்தத்திற் பானுகோபன் மார்பிற் பாய்ந்து தனது நான்கு கொம்புகளும் முறிபட்டு அவன் குத்தினுல் மூர்ச்சித்துக் கிடந்த அயி ராவதமானது தெளிந்தெழுந்து திருவெண்காடென்னும் தலத்தையடைந்து அதிற் பரமசிவக்கோலமாகிய இலிங்கத்தை ஸ்தாபித்துப் பக்திபூர்வமாகப் பூசித்து வருங்காலையிற் பரமன் அனுக்கிரகித்த படிக்கு முன்னம் ஒடிந்த கொம்புகள் முளைக்கக்கண்டு களித்து அப்பதி யைய நீங்காமலே பரமசிவத்தை வழிபட்டுக் கொண்டிருந்தது.

இவை நிற்க, மகம்மேருச்சாரலில்தவஞ் செய்திருந்த தேவேந்திர னும் அவன் மனைவியும் தேவதூதரால் இவைகளைக் கேள்விப்பட்டு மிகவிசனமுற்றுப் பரமசிவனை வழிபட்டிருக்கும்போது லோகநாய கன் கிருபைகூர்ந்து அவனுக்குப் பிரசன்னமாகி உனக்குவேண்டிய

வரங்களைக் கேட்டுக்கொள்ளெனத் திருவாய்மலர்ந்தருள, அதைக் கேட்ட இந்திரன் நமஸ்கரித்துச் சூரன் முதலியோரைக் கொன்று எங்கள் துன்பத்தினை விலக்கி அருளவேண்டுமென வேண்டினன். அதற்குப்பரமசிவம் மகிழ்ந்து யாம் பார்வதியோடு கூடி ஒரு குமாரனைத் தருவோம். அக்குமாரனால் நீங்கள் க்ஷேமம் அடைவீர்களெனச் சொல்லிப்பின் எங்களுடைய வருத்தங்கள் தீரத் தமது நெற்றிக்கண்ணினால் தேவரீரைத்தந்தருளினார், எம்முடைய தந்தையாகிய தேவரீர் அவதாரஞ்செய்தபிறகு இந்திராதிதேவர்களுக்கு முன்போயிருந்த உயிர் மறுபடியும்வந்து பொருந்தியதுபோலவும் அவர்கள் சூரனைக்கொன்று தத்தம் அரசுகளைக் கைகொண்டவர்போலவும் களித்தார்கள். ஆகையால் தேவரீரே அவ்வசுரனைக்கொன்று எங்களைக்காக்கவேண்டுவதன்றி வேறுபுகலிடம் எங்களுக்கில்லையென்று தேவகுருவாகிய பிரகஸ்பதி பகவான் சொல்லிவந்தபோது எல்லாம் உணர்ந்த குமரக்கடவுள்கேட்டு அதிகமகிழ்ச்சியடைந்து யாம் உங்களை இரட்சிப்போம் அய்யப்படவேண்டாமென்று இகபரங்களை உயிர்களுக்குக் கொடுத்தாளும் எம்பெருமான் கூறினார். மகபதியானவன் அப்போது அவ்வாறு! முருகக்கடவுளுடைய பாதங்களில் தேவக்கூட்டத்துடன் சாஷ்டாங்கமாய் வீழ்ந்து வணங்கித் துன்பமெல்லாம் போய் அளவிடக்கூடாத ஆனந்த சாகரத்தின் மூழ்கியிருந்தனன்.

2 வது அசுரகாண்டம் முற்றிற்று.

———(o)———

உ

குகசகாயம்.

3 வது மகேந்திர காண்டம்.

விருத்தம்.

விரிஞ்சன் மாறே வராலும்
வெலற்கரும் விறலோனாகிப்
பெருஞ்சுரர் பதமும்வேத
வொழுக்கமும் பிறவுமாற்றி

யருஞ்சிறையவர்க்குச் செய்த
வவுணர் கோனுயிர் கொள்வான்
பரஞ்சுடருருவாய் வந்த
குமரனைப் பணிதல் செய்வாம்.

சூரபதுமனுதியர் உற்பத்தி முதல் சயந்தனுதியவரைச் சிறையிலிட்டவரையிற் குமாரக் கடவுளுக்குப் பிரகஸ்பதி பகவான் கூறியபோது அக்கடவுள் வீரவாகு தேவரைச் சூரனிடம் தூதாக அனுப்பி அவன் காவலில் வைத்து வருத்தும் தேவர்கள் அனைவோரையும் விடுதலைசெய்யும்படிக்கும் அப்படி அவன் செய்யாவிடில் தக்ஷணமே அவனைப் புத்திரமித்திர களத்திராதிகளுடன் வேரோடு சின்னபின்னப்படக் கண்டித்து அவர்களை விடுவித்து வரத் தயாராயிருக்கின்றோம் என்றும் கேட்டு வரும்படிக்கு வருதி செய்தனர். அப்போது அத்தேவர் வேலாயுதமூர்த்தியின் பாதாரவிந்தங்களிற் பணிந்து விடைபெற்றுச் செல்லுங் காலையில் இந்திரனானவன் அவரைப் பின்தொடர்ந்து ஓ! வீரவாகு தேவரே! நீர்போகும் அவ்விடத்திற் காவலிலிருக்கின்ற என் குமாரன் முதலிய தேவர்களை முதலிற்கண்டு அவர்களுக்குத் தயிரியங்களைக் கூறியபின் அரசனிடம் பொய் வார்த்தையாடி வரவேண்டுமென வேண்டிக்கொள்ள அதற்கு அத்தூதர் இணங்கி அவரிடம் வருதிபெற்றுப் பின் கடலைத் தாவுவதாய்க் கந்தமாதன பருவதத்தின் பேரில் ஏறி விஸ்வரூபமெடுத்து மகா சிறப்புடன் விளங்கி நின்றனர். அப்படி நிற்கின்ற வீரகண்டை சப்திக்கும் பாதங்களையுடைய தேவரானவர் குமாரதேவருடைய திருவுருவத்தினைத் தியானித்துக் கரங்களைக் கூப்பி அவரைத் தொழுது சூரபதுமன் வாசஞ்செய்யும் பட்டணத்தை உற்றுநோக்கி வாயுவேகமும் பிற்படமுற்பட்டுத் தாவிப்போவதாயினர். இவ்விதமாகச் சமுத்திர மார்க்கத்திற் சென்று சூரன் பட்டணமாகிய மயேந்திரபுரியின் வடபாரிசத்தில் ஜெயசாலியாகிய யாளிமுகனென்னும் அவுணவீரன் காவலாயிருக்கின்ற இலங்கை நகருக்கு அருகில்வரும் சமயத்தில் வீரசிங்கனென்னும் ஓர் அவுணன் அவருக்கெதிரிற் போய்த் தடுத்துப் பலகோடி வீரர்களுடன் அவரையெதிர்த்துக் கொடிய சண்டை விளைப்பதை வீரவாகு தேவர்கண்டு நகைத்துத் தமது உடைவாளினால் அவ்வளவு வீரர்களையும் சடுதியிற் சுற்றிச் சுற்றி வெட்டி வெட்டிக்குவித்துச் சிங்காரஞ்செய்தனர். வீரசிங்கன் அதிககோபங்கொ

ண்டு முத்தலைச் சூலமொன்றை அவர் பேரில்விட அவர் அதை இருதுண்டாக வெட்டி எறிந்தனர். அவுணன் வச்சிராயுதத்தை எடுத்துவிசினன். அதையும் இருதுண்டாக வெட்டித் தள்ளிப்பகைவன் மற்றோர்படையை எடுக்குமுன்வீரவாகுதேவர் விரைந்துதமதுவாளினால் அவன்கரங்களைக் கண்டித்துப் பின் சிரத்தையும்கொய்து தள்ளினர். இப்படிக்குப் பாலசுப்பிரமணியக் கடவுள்விடுத்த தூதரானவர் தேவர்கள் கொண்டாட ஜெயம் பெற்றுப்பின் இலங்கையின் கொடு முடிகளின் ஒன்றின்மேற் பாய்ந்து நின்றனர். அதனால் இலங்கையானது கடலில் மிகவும் ஆழ்ந்து அதிகத் துன்பங்கள் நேரும்படிக் காளைதையாளி முகன் குமாரனாகிய அதிவீரன் தெரிந்து கோபித்துத் துரிதமாய் நால்வகைச் சேனைகளுடன் வீரவாகு தேவர்முன் வந்துயுத்தத்தைத்தொடங்கினபோது அவர் கோபங்கொண்டு தமது உடைவாளைக்கரத்திற்பற்றி அவுணர்பிராணன் துடித்து உடல்கள் கண்டதுண்டப்பட்டிறக்கும் படிக்குச் சங்கரிக்கத் தொடங்கி ஒரு நிமைப்போதிற் களத்தில் அதிவீரனைத் தவிர வேறே ஒருவரும் இல்லாமற் செய்து விட்டனர். அப்போது அதிவீரன் அவருடைய சேவகமே சேவகம் எனமதித்து வேலாயுதம் ஒன்றை எடுத்து அவர்பேரில் விட்டனன் அதை அவர் வாளினால் இருதுண்ட மாக்கினர். அவுணன் கோபித்துத் தண்டமொன்றைச் சுற்றி வீசினன். அது சீறிவருவதைக் கண்ட தேவர் அதனை ஒரு பொருளாக மதியால் தீரத்துவத்தோடு நிற்கும் போது அது அவர் மார்பிற்பட்டுத் தன்வலி யொடுங்கிப் பொடிப் பொடியாகி விட்டது. அப்பாதகன் அதைக்கண்டு அதிக ஆச்சரியத்தனாய் முத்தலைச் சூலமொன்றைப்பிரயோகித்தனன். அதை அவர் தமதுகையிற் பிடித்து ஒடித்தெறிந்தனர். பின் அதிவீரன் வடவைத்யைப் போற் கோபித்துப் பிரமன் அருளிய வீரவாள் ஒன்றைத் தன் கரத்திற் பற்றி வீரவாகு தேவர்மீதுதாவிவரப்பின் இருவரும் சுழன்று சுழன்று வாட்போரைச் செய்து வரும்போது பாலசுப்பிரமணியக் கடவுள் விடுத்த தூதரானவர் ஒருசாரி பின்னிடைந்து பாய்ந்து தமது வாளைவீசி அதிவீரன் இரண்டு பாதங்களையும் சிரத்தையும் தோள்களையும் மார்பையும் கண்ட துண்டங்களாகத் துணித்து நிலத்தில் தள்ளிச் சிங்காரதஞ் செய்தனர்.

பின் வீரவாகு தேவரானவர் பகைவர் எவரும் இல்லாததால

வீரமா மயேந்திரபுரிக்கு ஆகாயமார்க்கமாய்த்தாவிச்செல்லும் போது
அப்பட்டணத்தின் வடபக்கம்வாசலில் மகா வீரபராக்கிரம சாலிகளா
கிய அளவிறந்த அவுணவீரர்கள் தங்கள்தலைவர்கள் சகிதம் காவல்கொ
ண்டிருக்கும் திறத்தினைக்கண்டு அதைக்கடந்து செல்வது அரிதெனஅ
வர் அதிசயித்துக் கீழ்ப்புறவாயிலைப் பார்ப்போமெனக் கருதிஅவ்விட
ம் சென்று அக்கொடிய காவலையும் அவர்கண்டு யோசித்தவராய்த் தெ
ற்கு வாயிலைப் பார்க்கும்படிக்குப் போயினார். அவ்விடத்தில் கஜமுக
னென்னும் சேனைத்தலைவன் மகாபராக்கிரமாய்க் காவல் கொண்டிருந்த
வன் ஆகாயமார்க்கமாய்ப் போகும் வீரவாகு தேவரைக் கண்டவுடன்
அவரைத் தடுப்பதாக மகாகோபங் கொண்டெழுந்து ஆரடாபயலே!
அப்புறம்போகாதே! நில்லு! நில்லு! என்று அதட்டி என்னைமதி
யாமற் போகின்றனை! நீயார்?எனக்கேட்டுப் பிதற்றிக்கொண்டு அவரை
த்தொடர அப்போது அத்தேவர் அடாபயலே! உனக்கு இறுதிக்கா
லம் கிட்டிக்கொண்டது வாவா வென்றழைத்த மாத்திரத்தில் அவுண
வீரன் கோபங்கொண்டுஅவர்பேரில் ஒருபருவதத்தைப்பிடுங்கி எறிந்த
னன் அப்போது அவர் பாலசுப்பிரமணியக் கடவுளைத் தியானித்து
முயற்சியின்றி நிற்க. அப்பருவதம் அவர் பயத்திற்பட்டுத்தூளாய் வீழ்ந்
தது. பின் கஜமுகன்தனது ஆயிரம் துதிக்கைக்கும் ஆயிரம் பருவதங்
கள் கொண்டுவந்து வீரவாகு தேவர்மேல் எறிந்தனன். அப்போது
தேவர் முன்போலவே கந்தசுவாமியைத் தியானித்துநிற்க, அப்பருவத
ங்களெல்லாம் அவர்பேரிற்பட்டமாத்திரத்தில் தூளாய் வீழ்ந்தன. அது
கண்ட அவுணன் மகா ஆச்சரியங் கொண்டவனாய்ப் பின் பாரித்ததண்
டமொன்றையும் பிரயோகம் பண்ணித்தோற்றுத் தனது ஆயிரம்
துதிக்கைகளையும் கொண்டு பருவதங்களை வேருடன் பிடுங்கி வருங்
காலையில் வீரவாகுதேவர் அந்த ஆயிரந் துதிக்கைகளையும் மலைப்பாம்பு
களைப் போற்புரளும்படிக்கு வெட்டித் தள்ளப்பாதகன் சீறித்தேவ
ரைத்தன் வாயிற்போட்டு மென்று தின்னுவேனெனத்தனது இரண்டா
யிரங் கரங்களையும் இருபாரிசத்தினும் பரப்பி வீரவாகு தேவரைப்
பிடிக்கவர அவர் அவ்விரண்டா யிரங்கரங்களையும் தமது வீரவாளினா
ல் வெட்டித் தள்ளினர். பின் கஜமுகன் மல்யுத்தம்செய்வதாய்த் துணி
ந்து தனது புயங்களினால் வீரவாகு தேவருடைய புயங்களிற் பலமாக
மோதிப் பின்னிடையும் போது குமாரசுவாமியாரின் தூதர்தரிதமாக

த்தமது பாதகங்ளின் ஒன்றினால் அப்பாதகன் மார்பினிடத்து உதைக்
க அவன் பதைபதைத்து விழுந்து மாண்டனன்.

அப்போது வீராவாகுதேவர் தமது அவ்விதரூபத்துடன்பட்டண
த்துள்ளே செல்வது யுக்தத்தையே வருவித்துக்காலதாமதத்தைச் செ
ய்யுமெனமதித்துக் குமாரதேவரைச்சிந்தித்து அவர் அருளினால்அணு
ப்பிரமாணமான தேகத்தைக்கொண்டு ஆகாயத்திற் கிளம்பிக் கிழக்கு
க்கோபுரவாயிலின்மீதேறி நின்றனர். அப்போது அந்நகரம்முற்றிலும்
இராநின்ற அளவிறந்த அதிசயங்களைச்சிலநேரம் கண்ணுற்றிருந்ததே
வரானவர் பூமிதேவியானவள் அளவற்றகாலம் அரியதவங்களைச் செ
ய்துவருந்திப்பெற்ற பலப்பிராப்தியே இப்பட்டணமாக உருவெடுத்து
விளங்காநின்றதெனமதித்துப் பின்தமது அணுப்பிரமாணமாகிய உரு
வத்துடனே அப்பட்டணத்திலுள்ள இன்னும்மகாஅற்புத விநோதங்
களையெல்லாம் தப்பாமற்சுற்றி ஆச்சரியத்துடன்பார்த்து உலவிவரும்
போது இந்திரகுமாரனாகிய சயந்தனுதியரின் சிறைச்சாலையை அவ்வி
டத்தில் தேடிப்பார்ப்பதாயினர்.

இப்படி யிருக்கும்போது முன் சயந்தனும் மற்றத்தேவர்களும்
சிறைச்சாலைகளிற் கட்டுண்டு கொடிய இராக்ஷதர்களால் இந்திரன்
இந்திராணி இவர்களின் மறைவிடத்தைச் சொல்லும்படிக்குக் கொடு
ரமாகிய பலவிதங்களில் இம்சிக்கபபட்டு வருந்திச்சிவபிரானை நோக்கி
த்தங்கள் வருத்தங்களை முறையிட்டுச் சோர்ந்து அறிவிழந்த பிரேதங்
களைப்போல விழுந்துகிடக்கின்றபோது சராசரப்பிரபஞ்சங்கள் அனை
த்தினும் எள்ளில் எண்ணையைப்போலப் பரிபூரணமாகி விளங்கிநடப்
பிக்கும் கிருபைக்கடலாகிய ஆறுமுகக்கடவுள் அவர்கள் கிலேசங்
களைத்திருவுள்ளத்திற்கொண்டு சயந்தனுதியரின் இன்னலைப்போக்க
க்கருதி வெற்றிக்கொடி வச்சிராயுதம் அங்குசம் பாணம் வெற்றிவேல்
அபயம் சின்னமயமுத்திரை கமலம் மழு தண்டாயுதம் வில் மலர் மாலை
இவைகள் பொருந்திய பன்னிருகரங்களும் பூரணசந்திரோதயம்போ
ன்ற சண்முகங்களும் பிரகாசிக்கத்தக்கதாக அச்சிறைச்சாலையிற்
சோர்ந்திருக்கும் சயந்தனுதியரின் கனவில் ஒவ்வொருவருக்கும் தோ
ன்றித் தாம் இன்னாரென அவர்களுக்குத் தெரிவித்துத் தேறுதலை
சொல்லி ஓ! தேவர்களே! சிலதினங்களில் உங்கள் வருத்தங்கள் ஒழிய

முன்போல நீங்கள் நிலைபெற்றுச் செல்வங்களை அடைந்து வாழும்ப
டிக்கு நாம்செய்வோம் அதுவரை சலனமற்றிருப்பீரெனவும் நமது
சகோதரனாகிய வீரவாகுவையும் இனிப்பார்ப்பீர்களெனவும் இவகுமா
ரன் அவர்களுக்கு அநுக்கிரகித்து மறைந்தனர். பின்தேவர்கள் நித்
திரையினின்றும் எழுந்தவரைப்போலத் தாம் தம் உணர்ச்சியினைப்
பெற்றெழுந்து கர்த்தன் வாக்கியங்களை ஒருவருடன் ஒருவர் சொல்லி
க்கரங்களைக்கூப்பி அவரைப்போற்றி ஆனந்தக்கூத்தாடிக் கடினசித்
தமுடைய கொடியகாவலர் இவைகளைக்காணின் என்னசெய்வரோ
வென்னும் பயத்தினால் ஆரவாரமின்றி வீரவாகுதேவரை எதிர்பார்த்
திருந்தனர். அப்போது அத்தேவர் பலவிடங்களினும் அவர்களினு
டையஇருப்பிடத்தை ஆராய்ந்துவரும்போது பலகோடி அவுணவீரர்
காவல்செய்திருக்கும் அச்சிறைச்சாலையைக் கண்ணுற்றமாத்திரத்திற்
சயந்தனுதியர் அதிலிருப்பதாகத்தெரிந்து குமாரதேவரின் திருநாம
மந்திர முயற்சியினும் அக்காவலர் தன்னைக்காணுமல் அறிவற்றிருக்கு
ம்படிசெய்து சயந்தனுக்குச் சமீபத்தில் வந்தனர். அப்போது அவன்
பண்டுபழகியவனைப்போல் அவரைநெருங்கிப்போற்றித் தேவரீர் வந்த
காரியத்தைக் தயைசெய்ய வேண்டுமெனப் பிரார்த்திக்க வீரவாகு
தேவர் இந்திரதனயனைப்பரிவாகப்பார்த்து ஓ! சயந்தனே!ஷண்முகப்
பெருமானை உன்பிதாவாகிய இந்திரன்வணங்கி உன்னை விடுவிக்கக்
கேட்டுக்கொண்டமைக்கு இரங்கி அவர் திருக்கயிலையைவிட்டுப் பூமி
யில்வந்து தாருகனையும் கிரவுஞ்சகிரியினையும் வாட்டி இப்போது திரு
ச்செந்திற் பதியில் பிரமன் விஷ்ணு இந்திராதி தேவருடன் எழுந்த
ருளி இருக்கின்றனர். என்னைச் சூரபதுமன் சபைசேர்ந்து உங்களை
அவன்விடுதலைசெய்யும்படிக்குப் பேசிவர அங்கு நின்று தூதுவிட்ட
னர். என்பெயர் வீரவாகுதேவனென வழங்கிவருவரெனச் சொல்லக்
கேட்டசயந்தனுகியர் மிகச்சந்தோஷமாகி அய்யனே! எங்கள் துன்பங்
கள் சீக்கிரம் நீங்கும்படிக்குக்கிருபை செய்யவேண்டுமென்று பலவா
றுகப் பிரார்த்தனை செய்துகொள்ள வீரவாகுதேவர் அதற்கு இர
ங்கிச் சூரன் உங்களை விடுதலை செய்யாவிட்டால் வேலாயுதக்கடவு
ளானவர் நாளையத்தினமே இவ்விடம்வந்து அவுணர்பூண்டை வேரற
க்களைந்துஉங்கள் சிறையையும் விடுவிக்க விருக்கின்றனர் என அக்கட
வுளின் பிரதாபங்களையும் எடுத்துச்சொல்லிப் பின் அத்தேவர்களு
டைய கூட்டத்தைக் கையமைத்திருத்தி அச்சிறைச்சாலையைக் கடக்

கும்போது காவலர் முன்போல நினைவுண்டாகி எழக்கடவரெனச் சொல்லி விடுத்தனர்.

இவ்வாறு வீரவாகுதேவர் அவ்விடம்விட்டுப் பழயபடி சூட்சும ரூபத்தைக்கொண்டு வானவழியில் தாவிப்போய்ச் சூரபதுமன் அரண்மனையைச்சூழ்ந்த அகழியைக்கடந்து அதி அற்புதக்காவலைப் பொருந்திய பொன்மதிலைக் கிட்டிப்பற்பல ஆயுத சவரட்சணைகளைக் கொண்டு சத்துருக்கள்முதலிய ஜீவராசிகள் நுழைய இடங்கொடாமல் உயர்ந்துவானத்தை அளாவநிற்கும் கோபுரவாயிலின் சிறப்புகளைக்கண்டு அதிசயித்து அவ்வழிபோவதுயார்க்கும் அரிதெனக்கொண்டு அவர்களுக்குத்தோன்றமல் அதினுள்ளே பிரவேசித்துச் சூரபதுமன் மாளிகைமுதலிய வளப்பங்களையும் அவன் சபாமண்டபத்தின் பெருமைகளையும் கண்டு அதிசயித்துப்பின் இவைகளெல்லாம் சிவபிரான் வரப்பிரசாதமகிமையென அவ்விடம்விட்டு நீங்கிச் சிங்காதனத்து இருந்து அரசுசெலுத்தும் சூரபதுமன் முன்போய்வார்த்தையாட எத்தனித்துப் பரம்பொருளாம் சரவணபவன் சரணாரவிந்தங்களைத் தியானித்துச் சிங்கம் தாவியதற்கொப்பாக ஆகாயமார்க்கமாகக் கிளம்பிப் போய்க் கொலுவில் இருக்கும் சூரபதுமனுக்கு எதிரில் நின்று சிவகுமாரன் அருளால் சூட்சும உருவைமாற்றிச் சகலரும் காணத்தக்கதாகத் தமது நிஜரூபத்தைக்கொண்டு இறங்கிச் சூரபதுமனைப்பார்த்து ஓ! அவுணராஜனே! நான் சிவபிரானுக்கு இனியகுமாரதேவர் விடுத்த தூதன் எனத்தெரிவித்துப்பின் சூரன் உயரச்சிம்மாசனத்தில் இருக்க நான் நிலத்திலிருந்து வாதாடுவது பாலசுப்பிரமணியக் கடவுளது பெருமைக்கு அடாது எனக்கருதி அப்பெருமானைத் தியானித்த அளவில் அவர் அநுக்கிரகத்தால் வீரவாகுதேவருக்கு ஒப்பற்ற சிங்காசனமொன்று வானவழி அதிவேகமாகச் சொலித்துவர அதை அவர் கண்டு ஷண்முகப்பெருமாள் கடாக்ஷிக்கத்தமக்கு வந்ததாக எண்ணி அவரைச்சிந்தித்துப்போற்றிச்சிங்கராஜன் மலையில்தாவியதை ஒப்ப அதின்பேரில் ஏறிக் கண்டவர்யாவரும் அதிசயித்துப் பலவிதங்கள்பேச இராஜாதி ராஜன்சிங்காதனத்திற்கும் மேலாகக் கம்பீரமாய் வீற்றிருந்து பாலசுப்பிரமணியதேவர் திருநாமங்களைச் செபித்துக் கொண்டிருக்கின்ற வீரவாகுதேவர் ஜெயவுற்சாகங்களைச் சூரபதுமன் கண்டவுடன் அதிக்கோபங்கொண்டு சீறி அதட்டி அவரைப்பார்த்

து அடாபயலே! உன்னைப்பார்க்கின்ற காலையில் மாயவித்தைகள் சில
கற்றுக்கொண்டவனாய்க்காணப்படுகின்றது. உன்னைப்போலத்துணிவு
கொண்டு வேறேயாவரேனும் இவ்விடம் வந்து அவ்வித்தைகளைக்
காட்ட மிகப்பயப்படுவார்கள். அப்படியிருக்க விவேகமற்ற மூடனே!
நீ இப்போது காட்டிய இந்திரஜாலம் அரிதாகிய காரியமென்று
எவ்வளவும் எண்ணவேண்டாம். நீயாவன்? என்னநிமித்தம் இங்கே
வந்தாய்? உன்னை அனுப்பியவர் யாவர்? நீ வாளுக்கு இரையாகுமுன்
இவைகளை விரைவில் நமக்குச்சொல்லி விடக்கடவாயென்று அழன்
று கூறியபோது வீரவாகுதேவருக்கு அதிகக்கோபம் பிரவேசித்துச்
சூரபதுமனைப்பார்த்து ஓ! அவுணராஜனே! நான் மாயவித்தைக்கா
ரனல்ல. உன்னைப்போல் ஓர் சூரனென்று மதிப்பாயாக! இந்திரனைப்
பலவிதங்களிலும் வருத்தி அவன் தேவியுடன் தப்பி ஓடிப்பதுங்கித்
திரியச்செய்தது மன்றிப் பொன்னுலகத்தினை அக்கினி தேவனுக்கு
இரையாக்கி மற்றத் தேவர்களையும் அவர்கள் பெண்டுபிள்ளைகளு
டன் பாரவிலங்குகளைப்பூட்டி அரிய சிறையிற்படுத்தித்தகாத ஏவல்
களைச்செய்யச்சொல்லி வருத்துகின்றனை என்பதை மகாவிஷ்ணு பிரம
தேவன் இந்திராதிதேவர் முதலியவர்கள் பலதரம் சிவபிரானிடம் மு
றையிட்டு அதனைத் தவிர்த்தாளப் பிரார்த்தித்துக் கொண்டமைக்கு
அப்பிரானும் இரங்கித்தமது ஒப்பற்ற குமாரதேவரைக்கொண்டு அத்
துன்பங்களை அவர்களுக்குப் போக்கிவைக்கும்படிக்கு அளவற்ற பூத
ப்படைகள் சூழ இப்பூமண்டலத்திற்கு அனுப்புவதாக அப்படியே
அப்பாலசுப்பிரமணியக் கடவுளும் இவ்வுலகில் வந்து தாருகனை
யும் கிரவுஞ்சனையும் தமது வெற்றிவேலினால் பிளந்து கொன்று அப்
பதியைக்கடந்து நேற்றையத்தினம் தெய்வீகம் பொருந்திய திருச்செ
ந்திற்பதியில் வந்து சேர்ந்திருக்கின்றனர். நீசிறையில் அடைத்துவைத்
திருக்கின்ற தேவர்களைவிடுவித்துவிட்டால் இன்னும் சிலகாலம் வாழ்ந்
திருப்பாய். அப்படிச்செய்யாவிட்டால் இதோ குமாரதேவர் உன்னைப்
புத்திர மித்திரகளத் திராதிகளுடன் அளவிறந்த வெள்ளம் அவுணச்
சேனைகளையும் சின்னபின்னப்படவாட்டி நாசம்செய்து உலகஉபாதி
களை நீக்கிச்சகலரும் நிலைபெற்று வாழும்படிக்குச் செய்யத்திருவுள்
ளத்தில் எண்ணி இருக்கின்றார். இதனை உனக்குவிரித்துக் காட்டும்
படிக்குக் குமாரதேவர் எனக்குக்கட்டளை யிட்டனுப்பினர். ஆதலால்
துரிதமாய்த் தேவர்கள் காவலைவிடுதலை செய்து இன்னும்மகைதஸ்வரி

யங்களை அநுபவித்து வாழக்கடவை. நான் சிவசுப்பிரமணிய தேவருக்குப்பின் பிறந்த நவவீரர் இலட்சர்களில் மூத்தவனாகிய வீரவாகுதேவரென்னுந் திருநாமமுடையவ னென்று சொல்லியவாசகம் சூரபதுமன் கேட்ட அளவிற் கோபக்கனல் மூண்டு விழிகளில் அக்கினிப் பொறிகள் "குபீல் குபீல்" எனக்கொட்டக்கரத்துடன் கரத்தை ஓங்கித்தட்டிச்சபை அதிரும்படிக்கு நகைத்து இராஜாதிராஜர்கள் தொழுது போற்றும்படிக்கான ஏகசக்கிரேஸ்வரனாகிய சூரனென்னும் எனக்கு இன்னம் பற்கள முழுமையும் முளையாமல் மழலைச் சொற்கள் திருந்தாமல் வசனித்திருக்கும் அச்சிறுபாலனோ இத்தகைய புத்திகளைச் சொல்லி அனுப்புவன்? ஆதிமுதல் எங்கள் முன்னோர்களாகிய இராக்கதர் வம்சங்களைத் தேவர்கள் பலவாறிலும் துன்பம் செய்து கொன்ற தீங்குகளை உத்தேசித்து இப்போது நாம் அவர்களை அலைத்து வாட்டிக்கடையில் மீளாத சிறையிலும் அடைத்து வைத்தோம் உன்னை ஒருபொருளாக மதித்துப் பலவார்த்தைகள் நாம் சொல்வதாயில்லை. உலகங்கள் அனைத்தையும் அழிக்கின்ற தருணம் நேர்ந்தாலும் நம்வசப்பட்டிருக்கின்ற தேவர்களை விடுகிலையோம். நீ இப்படிக்கு நம்மிடம் மதிகெட்டு உளறியபடியால் இதோ நாம் ஓடிப்போன அந்த இந்திரனையும் மற்றத்தேவர்களையும் கூட இக்ஷணமே தேடிப்பிடித்து வரச்செய்து அவர்களுக்கு விலங்குகள் மாட்டி அரியகாவலிற் படுத்தி வருத்துவோம். என்தம்பி தாருகனையும் கிரவுஞ்சனையும்பிளந்து கொன்றசெய்தி நேற்றையத்தினம் தான் நாம்கேள்விப்பட்டோம். இதோ நம்சேனைத்தலைவர்களிற் சிலரை அனுப்பி அப்பாலனைவாட்டி. அவர்களைக் கொன்ற பழியைத்தீர்த்துக்கொள்ள இருக்கின்றோம். சிவனிடத்து உதித்த அப்பாலனோ என்எதிரில்நின்று சண்டைகொடுக்க வல்லவன்! தேவர்களை எக்காலத்திலும் விடுதலை செய்வதில்லை நீ பயித்தியகாரனாகையாற் பாலன் வார்த்தைக்கு இசைந்து நம்மிடம் தூதாகவந்தனை ஆயினும் உன்பிராணனை வாங்காமல் தயை செய்து விடுகின்றோம் இனி இப்பட்டணத்திற் சற்றும் நில்லாமல் தப்பிப்பிழைத் தோடக்கடவை யென்று சூரபதுமன் பேசியதை வீரவாகுதேவர் கேட்டவுடன் எழுந்த கோபக்கனலானது மனதைவருத்தச் சிறிச்சபை அதிரும்படிக்கு நகைத்தவராய் இதனைச் சொல்லுவதாயினர்

ஓ! சூரனே! நீபரமேஸ்வரனுடைய நுதல்விழிகளில் உதித்த சரவணபவன் பெருமைகளையும் குணாதிசயங்களையும் விரப்ராக்கிரம உத்தண்டங்களையும் எவ்வளவும் கவனியாது மூடத்தனத்தாற் பாலனென்று இகழ்ச்சியாகப்பேசிய உன் நாவை இந்த வீரவாளினாற்கொய்து சிரமற்று நிலத்தில் விழுந்து உருளவெட்டித்தள்ளி உன்னுயிரையும் எமலோகத்திற்கு அனுப்பிவிடுவேன். ஆனால் எந்து அய்யனிடத்தில் அப்படிக்கு உத்தரவு யாம்பெற்றுவரவில்லை யென்றவுடன் சூரன் சிறித்து தூதாக வந்தவனைக்கொல்லல் நமக்கு அடாதெனச்சொல்லிப் பக்கத்தில் தனது பணிவிடையை எதிர்பார்த்திருக்கும் ஆயிரம் ஜெயசாலிகளாகிய வீரரைப்பார்த்து நம்மை மதியாமற்பேசும் இவனைப்பிடித்துப் பாரவிலங்குபூட்டி அரியசிறையில் அடைத்துப் பத்திரமாய்க் காக்கக்கட வீர்களெனக் கட்டளையிட்டனன். உடனே அந்தவீரர்கள் வீரவாகுதேவரைப்பிடிக்க நெருங்கி வருகின்றசமயத்தில் அவர் நீண்டிருக்கும் தமது கரங்களில் ஒன்றைநீட்டி அவ்வீரர்சிகைகளைச் சேர்த்துப் பிடித்துத்தூக்கிச் சுழற்றிச்சபாமண்டபத் தூணினிடத்தில் ஓங்கிமோதி அவர்களைக்கொன்று உடல்களைச் சூரன்மேல் எறிந்து எமது இறைவன் வெற்றிவேலானது உன்னைக்கொல்வது நிச்சயம். சண்டாளனாகிய உன் முகத்தையும் பார்க்கமாட்டேன். போய்வருகிறேனென்று வீரவாகுதேவர் வானத்திலெழுந்த மாத்திரத்தில் அவர் வீற்றிருந்த சிங்காதனமானது சடுதியில் வானத்திலெழுந்து மறைந்தது. அம்மாத்திரத்திற் சூரபதுமனுக்கு அதிகக் கோபமாகித்தனது அருகிலிருக்கின்ற சதமுகன் என்னும் அவுணவீரனைப் பார்த்து நம்மைமதியாமல் வைதுபேசி ஆயிரம் வீரரையும் விரைவிற்கொன்று அவமானப்படுத்திப்போகின்றனன். அவன் தூதனதலாற் கொல்லாமல் நீ இந்நிமிஷம் அவனைக்கட்டிப் பிடித்து வரக்கடவை என்று ஆக்கியாபிக்க அவ்வீரன் உடனே வீரவாகுதேவரைச்சகல சயினியங்கள் சூழவளைந்து கொண்டு தனுசுகளிற் கூர்மையாகிய கொடிய பாணங்களை அமோகமாய்ப் பூட்டிச்சற்றும் இரக்கமற்றபாதகர் அவர் ஒருவர் பேரிற் செலுத்தியபோது அவைகள் முருகக்கடவுள் அனுப்பியதூதர் பேரில் வந்து விழுந்து யாதொரு பிரயோசனமு மின்றித்துகள் பட்டுவீழ்ந்தன. அப்போது வீரவாகுதேவர் கோபங்கொண்டு மகம் மேருவைப்போல் பதினாயிரம் சிகரங்கள் விளங்கவானத்தை அளாவியிருந்த ஒரு கோபுரத்தில் தாவி அதைப்பறித்துக் கொண்டு தம்மை

னாதாடிகள் சூழ்ந்திருந்த சயினியங்கள் பேரில் வேகமாய் வீசிவீசி ஒரு நொடியில் அச்சேனைப் பெருக்கனைத்தையும் மடித்துச் சதமுகனேந்த னியேருக்கிவிட அவுணவீரன் அவர் திறத்தைக்கண்டு மனம்கலங்கின னாய்ப்பின் தம்பிரியத்தையும் விடாமல் அளவிறந்தசரங்களை அவர் பேரிற் பொழிந்து ஆர்ப்பரித்தான். வீரவாகுதேவர் அவைகளையும் சட்டைபண்ணாமல் தட்டிப்போட்டு வேகமாய்ச்சென்று அச்சேனைத் தலைவன் கரத்திற் கொண்டிருக்கும் வில்லைப்பறித்து ஒடித்தெறிந்த போது சதமுகன் அவரைத்தன் வலப்புறத்து நூறு கரங்களினாலும் பிடித்தான். அக்காலையில் வீரவாகுதேவர் தமது வலியபுயத்தினால் அவன் மார்பில்தாக்கிப் பூமியில் விழுந்து உருளத்தள்ளி அவன் பழய படிக்கும் எழுந்தவர எத்தனித்த சமயத்தில் அவர் அப்பாதகன் நூறு சிரங்களையும் கொய்து அவனை மடித்துவிட்டனர். பின் சண்முகப்பெருமாள்கிருபையுற்றுச்சொல்லி அனுப்பிய நீதிகளை அங்கீகரியாமல் இகழ்ந்துபேசிய இச்சூரபதுமன் வீற்றிருந்து அரசுசெலுத்தும் சபாமண்டபத்தையும் பின் இப்பட்டணத்தையும் நாசம்பண்ணக்கடவேனெனச் சபதம்பேசிச் சரவணபவன் திருவடிகளைத் தியானித்து விஸ்வரூபங்கொண்டு நின்றபோது அந்நகரமும்அவர்மிதிக்கு ஆற்றாமல்தத்தளித்து அதின் எல்லைகளில் எங்கும் இருந்து கடற்சலம் அப்பட்டணத்துட்புகுந்து அவ்விடத்தில் அளவிறந்த சேதங்களும் துன்பங்களும் விளைவித்தன. அக்காலத்திற் சூரபதுமன் அரமனையைக்காவல் செய்திருந்த அன்பதுவெள்ளம் அவுணவீரர்களும் அவ்விஸ்வரூபத்தைக்கண்டு பயந்து பின் சூரனுக்குப்பயந்து கோபித்தெழும்பி அவரைவந்துவளைத்துக் கடும்போர் செய்ய வீரவாகுதேவர் தமது வலியகால்களினாலும் கைகளினாலும் அவர்கள் எல்லோரையும் எமலோகம் குடியேற்றுவித்தனர். பின் சண்டைமுகத்தில் ஒருவரையும் காணாதபடியினால் வீரவாகுதேவர் சூரபதுமன் அரமனைமுகப்பில் மகம்மேருவினும் பாரித்துவிளங்கிநின்ற கோபுரத்தைப்பறித்துத் தம் கரத்திற்கொண்டு அவன்வீற்றிருந்து அரசுசெலுத்தும் நவரத்தினமயமான சபாமண்டபத்தின் மேற்குறிப்பிட்டு வீசிச்சிங்கநாதம் செய்தனர். அக்கோபுரமானது சுழன்றுபோய் அம்மண்டபத்தின்மீது அதிக ஓசை எழவிழச் சூரபதுமன் தவமகிமையினால் அவனும் பிள்ளைகளும் தவிர மற்றவர்கள் அனேகருடன் அதுஉருத்தெரியாமல் துஞ்ச

பட்டுப்போனது. உடனே சூரபதுமன் வீரவாகுதேவர் விஸ்வரூப
த்தைக்கொண்டு சபையை நாசப்படுத்தினதைக்கண்டு கடுங்கோர புத்
திரனைத் தன் அருகிலிருக்கின்ற ஐந்நூறு சிரங்களும் ஆயிரம் கரங்க
ளும் பெற்றிருக்கின்ற வெற்றியாளராகிய அவுணவீரர் ஆயிரவரை
அனுப்பி அவ்வீரவாகுதேவரைப் பற்றி தம்முன் அவன் அவய
வாதிகளைக்கொய்து பின்னமாக்கிப் பின் அவனைக்காவற்படுத்தி வருந்
தக் கடவீர்களெனக் கட்டளையிட்டனுப்பினான். அவ்வீரர் தம்மைவந்
தெதிர்க்குமுன் வீரவாகுதேவர் அப்பட்டணத்தின் சிறப்புகளையும்
செல்வப்பெருக்கையும் நாசமாக்குவனாய்த் துணிந்து நகரமெங்கும்
சின்னபின்னப்படப் பிரசண்டமாருதத்தைப் போலச் சுழன்று சுழன்று
உலவிச் சாடியகாலத்தில் வீதிகளிலிருந்த உப்பரிக்கைகள் மேடைகள்
மாளிகைகள் ஒன்றேனும் உருவாகக் காணப்படாதபடி சகலமும்
இடிந்து நுறுங்கி நிலத்திற் கலந்து சமனாய்க் காணவிளங்கின. வீர
வாகுதேவர் அப்படிக்குச் சாடியபோது தேவர்கள் காவலிற்பட்டிருக்
கின்ற சிறைச்சாலைக்கு மட்டும் யாதொரு பின்னமும் நேராமற் பாது
காத்து இரட்சித்தனர். முன் சூரபதுமன் ஏவியசக்கிரவாகுக ளென்
னும் கொடிய பாதகர்கள் வீரவாகு தேவரைக் கிட்டிவளைத்துக்கொ
ண்டு தமதுவிற்களில் தேவப்படைகளைப் பூட்டி அபரிமிதமாய் அவர்
மீதிற் செலுத்திய காலையில் வீரன் சிறித்தக்ஷணம் ஓர்மாமரத்தைப்
பிடுங்கித் தமது கையிற்பிடித்துக் கொண்டு அம்மரம் ஒன்றைக்கொண்
டே மேற்குறித்த ஆயிரம் வீரர்களையும் அவர்களுடன் பெரும்புறக்
கடலை ஒப்ப இரைந்துவந்த சதுரங்க வெள்ளங்களின் பெருக்கையும்
சுழற்றிச்சுழற்றி மோதிக்கண்டம் கண்டமாய் அதப்படித்திக்கொன்
று எதிரிகள் ஒருவரும் இல்லாமையாய் மதயானையைப் போலப்போர்க்
களத்தை நோக்கி நின்றனர். இது காரணங்களைச் சூரபதுமன் கேள்
விப்பட்டு வீரவாகு தேவரின் சௌரியங்களையும் புயவன்மைகளையும்
நினைந்து நினைந்து மனம் பொருமற் சபையிலிருக்கின்றவர்களைப்பார்
த்துச் சொல்லுகின்றான். பாலசுப்பிரமணியன் விடுத்த அபலனாகிய
ஒரு தூதன் விசாலமாகிய கடலைத்தாவி இலங்கை முதலிய அரிய
காவல்களைக்கடந்து இந்த மகாசபையிற்சேர்ந்து சற்றும் பயமில்லா
மல் நாம் வீற்றிருக்கின்ற சிங்காதனத்திலும் சிறந்ததாய் உன்னத
முள்ள பீடத்தில் அசைவற்றிருந்து அகன்ற மண்டலாதிபதியாகி

நம்மிடத்திற் கொஞ்சமும் மரியாதையின்றி அவமதித்துப்பேசி நாம்
ஏவிய வீரரையும் கொன்று சபையைக்கலக்கி நமது பட்டணத்தை
யும் அழித்து இப்போது அளவற்ற அவுண வீரர்களையும் கொன்று
இன்னம் இப்பதியைவிட்டுப் போகாமல் வீற்றிருக்கின்றனன் எனக்
கேட்டோம். நமது பெருமை நேர்த்தியாக இருக்கின்றதெனச் சொல்
லி மேல் நடக்க வேண்டியதை யோசித்திருக்கும்போது பத்துத்தலைக
ளும் இருபது கரங்களு முடைய வச்சிரவாகு என்னும் அவன் பிள்ளை
எழுந்து அவன் பாதங்களிற் பணிந்து அத்தூதனை இந்நிமிஷம் தாங்
கள் ஆக்ஞை செய்யும்படிக்குப் பிடித்துக் கட்டிவந்து தங்கள் முன்
விடுவேனெனச் சொல்லி விடைபெற்றுத் தனது தோழர்களையும் யுத்த
சன்னதராய் வரும்படிக்குக் கட்டளையிட்டுத்தானும் போர்க்கோலங்
கொண்டு தேர்கள், மதயானைகள், குதிரைப்பந்திகள் தனித்தனி அஞ்
ஞூறு வெள்ளமும் அவுணர் இரண்டாயிர வெள்ளமும்கொண்ட சது
ரங்க சேனைகளுடன் புறப்பட்டு வரும் மார்க்கத்தில் அவனுக்கு நேர்
ந்த துர்ச்சகுனங்களையும் பாராட்டாமற் கோபத்தையே முன்னிட்டுக்
கொண்டு வருகின்றவனை வீரவாகு தேவர்கண்டு இந்த ராஜகுமாரனை
யும் அவனைச்சேர்ந்த இந்தச்சதுரங்க சேனைப்பெருக்கினையும் அந்தி
படுமுன் வெற்றிபெறுமற் போவேனாயின் நான் ஆறுமுகேசன் அடி
மையாக மாட்டேனென்று பிரதிக்ஞை செய்துகொண்டு வேலாயுதப்
பெருமானது செந்தாமரை மலரடியைத் தியானித்து யுத்த சன்னத்த
னாய்ப் புயங்களைத் தட்டிச் சிருங்க நாதத்துடன் அட்டகாசஞ்செய்து
கரங்களைப்பிசைந்துகொண்டு இராஜகுமாரன் வரவை எதிர்பார்த்திரு
க்கும் சமயத்தில் அம்முழக்கத்தைச் சூரன் குமாரனாகிய வச்சிரவாகு
கேட்டு அதிசயித்து நம்மைக்கண்டு கிஞ்சித்தும் மதியாமற் கொக்கரி
த்த சத்தமென மதித்து அடங்காக் கோபத்தனாகி முருகப்பெருமாள்
தூதனாகிய வீராதி வீரனைச் சீக்கிரத்திற்கிட்டி நால்வகைச்சேனைகளு
டன் அவரை வளைத்துக்கொடிய பாணங்களைச் சங்கையின்றி அவர்
பேரில் ஏகோபித்துப் பிரயோகித்தபோது அனலையொத்த வீரவாகு
தேவர் திருமேனி முற்றும் உதிரம் பீறிட்டுச் சிவந்து காட்டவும் அ
வர் அதிகக் கோபங்கொண்டு ஓர் வேங்கைபோலச் சயினியத்திற் பாய்
ந்து கோடி கோடிக் கணக்கில் வீரர்களைப் பலவிதங்களில் மடித்துக்
கொன்று அப்பாலும் கோபந்தணியாமல் மரங்களைப் பிடுங்கிக் கொ

ண்டே இரதகஜதுரகபதாதிகளைச் சுழற் காற்றைப்போல வளைத்து வளைத்துச்சாடி நிர்மூலப்படுத்திப்பின் தோழரான பாலகுமாரர்களையுங் கொன்று வச்சிரவாகுவைத் தனிப்படவிட்டனர். அதை இராஜகுமாரன் கண்டு பிரமித்தவனாய் ஓ! தூதனே! உன் புஜபலபராக்கிரமத்திற்கு மிக மெச்சினேன். வீரவாகுவென்பது உனக்கேதகும். உன் தயிரியத்துக்கு யாவரையும் ஒப்புச்சொல்லக்கூடவில்லை. என்கண்காண இப்போது நீ செய்த சண்டைக்கு நிகராய் முன்னோர்களிலும்எவரும் செய்திருந்ததாய் நான் கேள்விப்பட்டதில்லை. ஓ! வீரனே! அப்பேர்பட்ட உன் ஆண்மைத்தையான் இனிச்சிலநேரத்தில் அடக்கி உன்னைக் கட்டிக்கொண்டுபோய் என் பிதாவின் முன்விடக் கடவேனென்று அவர் கண்டத்திற்கும் புயத்திற்கும் மார்பிற்கும் குறிகொண்டு அனேக பாணங்களை ஏவி ஆர்ப்பரித்தனன். அப்போது வீரவாகுதேவர்களத்தில் விழுந்து கிடந்த பாரித்த இருப்புலக்கை ஒன்றை எடுத்துக்கொண்டு அப்பாணங்களை எல்லாம் தும்சப்படுத்தினர். இராஜகுமாரன், அவ்விருப்புலக்கையைப் பாணத்தாற்பொடியாக்கிவிட்டு ஆயிரம் இரண்டாயிரம் கணக்கிற் கொடியபாணங்களைச் சந்தித்துவிட அவைகள் வீரவாகு தேவர் சரீரமுற்றுந்தாக்கி உதிரம் பெருக்கெடுத்தோடவதினால் அவர்களைத்து நிமைப்போது மயங்கிஇருந்து உடனே தெளிவுண்டாகிச் சிங்கத்தைப் போலப்பாய்ந்து வச்சிரவாகு ஏறியிருந்த இரதத்தை வாரியெடுத்துக் கிறுகிறெனச் சுழற்றி ஆகாயத்தில் வீசியெறிந்து வீரசிங்கத்தைப் போலக் கர்ச்சித்து உலவிக்கொண்டிருந்தனர். அவ்விரதம் அவனுடன் வெகுதூரம்போய்ப் பின் திரும்பிவந்து பூமியில் விழுந்து நுறுங்கிய காலத்தில் தனக்குச் பலகாயங்கள் பட்டபோதினும் சூரகுமாரன் அவைகளைப் பாராட்டாமல் தீரனாய்த் தன் வில்லை வளைத்தனன். வீரவாகு தேவர் அதை அவன் கையில் நின்றும் பறித்து முறித்தெறிந்து விட்டனர். உடனே சூரகுமாரன் தனது உடைவாளை உருவிக்கொண்டு இடம் வலம் பாய்ந்து வருவதை வீரவாகு தேவர்கண்டு துரிதமாய்த் தமது வாளாயுதத்தை உருவிக்கொண்டு அவனுடன் சண்டைசெய்து கடைசியில் அவன்பத்துச்சிரங்களையுங் கொய்து தள்ளிமடித்தனர்.

பின் வீரவாகு தேவரானவர் தம்முடன் சண்டைகொடுக்க ஒரு

வரையுங் காணமல் விரைவிற் செந்திற்பதியைச் சேருவதாய்ப் பிரச
ண்டவாயுவைப் போன்று ககனமார்க்கமாகப் பறந்து முருகப்பெரு
மானைத் தியானித்துக்கொண்டு மயேந்திரத்துக்கு வடபாரிசக் காவலா
யுள்ள இலங்கைப்பதியைச் சமீபித்தகாலையில் முன் சூரபதுமனைக்கா
ணப்போய் இப்போது திரும்பி அவ்விடம் வந்து தன்குமாரன் இறந்
ததும் பட்டணம் அழிந்த செய்தியும் கேட்டு வெகுண்டிருக்கும் யாழி
முகன் என்பவன் அவரைக்கண்டு யாரடாபயலே! நில்லு! நில்லு! எ
ங்கேமறைந்தோடுகின்றாய்! என்று அதட்டித்தடுத்துப் பாதகனே!
யாம்இல்லாதகாலத்து இப்பதியை அழித்ததுமின்றி என் அருமை
ப்புதல்வனையும் கொன்றனை. மேலும் சக்கிராதிபதியாகிய சூரபதுமன்
நகரையும் பலவளங்களையும் மனதிற் கினியபுதல்வனையும் பின்னப்படு
த்தினையெனக்கேள்விப்பட்டோம். இப்படிக்கான பழிகாரப்பயலாகி
ய நீமீளவும் பிராணனுடன் உன் இருப்பிடம் சேரப்போகின்றாயோ?
உன்னை நிமைப்போதிற் கொல்லாமல் விடேன்! புத்தியீனனே! உன்
னாற் கூடியமட்டும் பார் என்று தன்னைச்சூழ்ந்து வந்தசதுரங்கசேனை
களையும் வீரவாகுதேவர் மீதில்விட்டபோது அவர்கோடையிடியைப்
போல்யாவரும் நடுங்கக்கர்ச்சித்துத் தமது மின்னலை ஒத்தவாளாயுத
த்தை உருவி இடசாரிவலசாரியாக அந்த இராக்ஷதக் கூட்டமத்தியிற்
பாய்ந்து அவர்களைத்தலைவேறு தோள்வேறு மார்புவேறு இவ்விதங்
களாக அச்சேனா சமுத்திரங்கள் அனைத்தையும் நாசஞ்செய்து முடித்
ததையாழி முகன்கண்டு கோபதீபிதனாய் அவரைப்பற்றிப் பிசைந்து
கொல்வதாய்த்தன் ஆயிரங்கரங்களை அவர்பேரில் நீட்ட அவைகள்
அனைத்தையும் தமது வீரவாளினால் வெட்டியெறிந்தனர். பின் அவு
ணன் தனது மற்றோராயிரம் கரங்களைக்கொண்டு அளவிறந்த பருவ
தங்களைப்பிடுங்கி வீரவாகுதேவர்மேல் எறிந்தகாலையில் அவைகளுக்
கெல்லாம் அவர் தப்பித்துக்கொண்டு அவனுடைய மற்றோர் பாகத்
தின் ஆயிரங்கரங்களையும் சேதித்தெறிந்தனர். அவன் வடவையைப்
போற்சொலித்துக்குமார தூதரைப் பிடித்துக்கொள்வதாய்த் தனது
நீண்ட ஆயிரந்துதிக்கைகளையும் நீட்டித்தாவி வரும்போது இவர்த
மது வீரவாளைக்கொண்டு அவன் ஆயிரஞ்சிரங்களையும் வெட்டித்தள்
ள அவன் அலறிப் பூமியில் விழுந்திறந்தான்.

இவ்விதமாய் அதம் செய்தபின் வீரவாகுதேவர் எதிர்ப்பாரைக் காணுததால் வீரவாளை உறையிற்சேர்த்து இலங்கை எல்லையைக்கடந்து ககனமார்க்கமாய் மனோவேகத்தினும் முந்திச்சமுத்திரத்தைத்தாண்டித் திருச்செந்திற் பதியைச்சேர வருகின்றதைப் பூதவீரர்கள் பார்த்தமாத்திரத்தில் ஜெயஉற்சாகங்களுடன் குதித்துக்களிக்கின்ற காலத்தில் அவர்கள் தலைவர்கள் ஓடிவந்து கரங்களைக் கூப்பிக்கொண்டு நெருங்கி வீராதி வீரனே! தேவரீர் புஜபல பராக்கிரமங்களை எங்களாற் புகழக்கூடுவதோ என்று பலவிதங்களில் அவரைத் துதித்து உபசரித்தார்கள். அப்போது வீரவாகுதேவரும் அவர்களிடத்தில் மிகுந்த பரிவுடன் குமாரதேவர் கட்டளைப்படிக்குச் சூரனிடம் வார்த்தையாடி வந்தேன் என்று பிரியவசனங்களைப் பேசியிருக்கின்றபோது சண்முகப்பெருமான் சந்நிதானத்திற் காத்திருந்த துணைவர்கள் எண்மரும் இலட்சத்தவரும் வேகமாய்வந்து முன்னவன் திருப்பாதங்களில் வீழ்ந்துபணிந்தார்கள். உடனே அவர்களை வாரியெடுத்தணைத்து க்ஷேமங்களைவிசாரித்தபின்பு தம்பியார்சூழ்ந்து வரநடந்து போய்ச்சுயஞ்ஜோதி வடிவாய் எங்கும் பரிபூரணமாய் நிறைந்து நடிப்பிக்கும் பெருமையினைப்பெற்ற குமாரதேவர் வீற்றிருக்கும் திருமாளிகையிற் பிரவேசித்து மகாவிஷ்ணு பிரமதேவன் இந்திரன் தேவர்கள் ரிஷிக்கூட்டங்கள் முதலியவர்கள் சூழ்ந்து போற்ற நவரத்தினமயமாகிய திருச்சபையில் விளங்கும் சிங்காதனத்தில் தேவதேவோத்தமனாகிய குமாரதேவர் எழுந்தருளியிருக்கும் காட்சியைத் தெரிசித்து அதிகஆவலுடன் ஆனந்தப்பரவசராய் ஜெய ஜெய வெனப் போற்றிச் சமீபித்துப் பாலசுப்பிரமணிய தேவரின் பாதாரவிந்தங்களில் மும்முறை வலம்வந்து சேவித்தெழுந்து துதித்து நிற்கின்ற வீரவாகுதேவரைக் குழந்தைவேலன் கிருபையாகப் பார்த்தருளிச் சூரபதுமன் சபைக்குப் போய் வந்தசங்கதியைச் சவிஸ்தாரமாய்ச் சொல்வாயெனக் கட்டளையிட்டனர்.

அப்போது அவர் பக்திவிநயத்துடன் வாய்புதைத்துக் கொண்டு தேவரீர் அருளிச்செய்தபடிக்குச் சூரன் பிழைக்கும் மார்க்கங்களைப்பற்பல விதங்களில் தெரிவித்தபோதினும் அவைகளைத்தான் கடைத்தேறத்தக்கதாக நினையாமற் கோபித்துத் தேவர்கள் சிறையை ஒரு

போதும் விடுவிக்கமாட்டேனென்று உறுதியாகச்சொல்லிவிட்டனன். அடியேன் யாதொரு பிரயோசனங்களின்றித் திரும்பினேனெனப் பேசியமாத்திரத்திற் சகலமும் தெரிந்த கந்தசுவாமியார் திருநகைகொண்டு ஓ! சூரனே! நீ செய்துவந்த காரியங்களில் ஒன்றும் சொன்னவனல்லை. அவைகளை இச்சபையோர் அறியும்படிக்குச் சொல்லுவாயெனக்கட்டளையிட வீரவாகுதேவர் கர்த்தனே! கொடிய சூரன் நகரத்துட் பிரவேசிக்கும் காலத்திலும் திரும்பும் காலத்திலும் இலராக்ஷதர்கள் தடுத்து வாதாடியபோது தேவரீர் வலிமையினால் அவர்களனைவரையும் கண்டித்துவந்தேனெனச் சொல்லியபோது சரவணபவன் அவரிடத்துப் பூரணகடாட்சத்தினால் அப்பனே! அவர்கள்மடக்கி வாதாடியபோதுமிகவும் வருந்தினையோவென அவர் முதுகைத்தடவிக் கிருபாநோக்கம் பாலித்து விஷ்ணு பிரமன் இந்திராதியர்களைப்பார்த்துக் கேட்டீர்களோ! அச்சூரன் நமது வாக்கியங்களைத்தடுத்தனன். ஆகலால் இனி அந்தப்பாதகன் மாதாங்காரத்தை அடக்கித்தேவர்களை மீட்டுக்கொண்டு வரும்படிக்கு நாளைக்கே போவது உசிதமெனத் திருவாய்மலர்ந்தருள அவர்கள் வருத்தங்களொழிந்து களிப்புடன் அப்படி நடத்துவது முக்கியமெனச்சொல்லி யிருந்தார்கள். பின்வீரவாகுதேவர் இந்திரனைக்கண்டு சயந்தனது தேவர்கள் சங்கதியையும் விளம்பி அவன் மனவாட்டங்களைப் போக்கினர். இவைநிற்க, இனிச்சூரன் சங்கதிகளை இயம்புவாம்.

வேவுகாரரால் தனது அருமைக் குமாரனாகிய வச்சிரவாகு என்பவன் மாண்டசங்கதியைச் சூரன்கேள்விப்பட்ட மாத்திரத்தில் அவன் சிங்காசனத்தினின்றும் பூமியில் விழுந்து அடா என் செல்வகுமாரா! என்னை மோசம்செய்து போனையோவென்று பலவிதங்களில் வெகுநேரம் பிரலாபித்தகாலையில் தருமகோபனென்னும் மந்திரியானவன் அவன் அருகில்வந்து கரங்களைகூப்பிக்கொண்டு மண்டலாதீஸ்வரனே. உமது கீர்த்திப் பிரதாபங்களையும் சூரத்தன்மைகளையும் எவ்வளவும் நினையாமற் கிலேசத்தை மேலிட்டிருப்பது உம்மையொத்த வீரர்களுக்குத்தகுமா வெனப்பலவாறுகூறி அவனைத்தேற்றியபோது அவன் சோபம் நீங்கி எழுந்து தூதரைப்பார்த்து நமது திருக்குமாரனை அஞ்சாது கொன்ற அக்தூதன் எங்கேயெனக் கோபித்துக்கேட்க அவர்கள்

இலங்கையைக்கடந்து சென்றனவெனக்கூறினர். பின் சூரன் அவ
ர்களைநோக்கிப் பிரமனைக் கணப்போதில் அழைத்துவரக் கட்டளையி
ட அதற்கு அவர்கள் இராஜாதி ராஜனே! பிரமன் இந்திரன் விஷ்ணு
முதலானதேவர்கள் பாலசுப்பிரமணியரைச்சூழ்ந்து உம்மைமதியா
மற் பயமின்றியிருப்பதாய்க் கேள்வியாகின்றோம் எனத் தெரிவித்த
காலையில் அவன் நல்லகாரியம் அவர்கள் கர்வத்தைச் சீக்கிரத்தில் அ
டக்குகிறேனென்று பல்லைக்கடித்து நீங்கள் மற்றோர் அண்டத்திற்கு
ஓடி வேறு பிரமனைப்பிடித்து வருவீர்களெனக் கட்டளையிட்டமாத்திர
த்தில் அவர்கள் அங்குஓடி அவரை யிழுத்துவந்து சூரன்முன்
நிறுத்தினர். அக்காலத்திற் சிருஷ்டிகர்த்தனை அவன் அருகில் அழை
த்துப் பிரமனே! அழகுபின்னப்பட்டுப் போயிருக்கும் இப்பட்டணத்
தைப்பழயபடிக்கு நிருமிப்பாயெனக் கட்டளையிட்டனன். அவன்
அப்படியே அவ்வேலையைச் சீக்கிரத்தில் நிறைவேற்றிக் சூரனிடம்
வருதிபெற்றுத்தன் இருப்பிடம்சென்றனன். பின் சூரன் சபாமண்ட
பத்தில் முன்போலச் சிங்காதனத்தில் வீற்றிருந்து வேவுகாரர்களைக்
குறித்து நீங்கள் அதிவேகமாகத் திருச்செந்திற் பதிக்குப்போய் அவ்
விடம் இருக்கப்பட்ட செயல்களை நன்றாய் அறிந்துவருவீர்களெனக்
கட்டளையிட்டனன். அவர்கள் அப்படியே அவ்விடம்சென்று திரும்பி
ச் சூரனிடம் வந்துபணிந்து சொல்லுகின்றனர். ஒன்று பத்து நூறு
ஆயிரம் சிரங்களையும் அதற்கு இரட்டிவலிய கரங்களையும் கொண்ட
பெரியதேகங்களைப் பெற்றிருக்கின்ற இரண்டாயிரவெள்ளம் பூதப்
படைகளும் அவர்களுக்குத் தலைவர் நூற்றெண்மரும் சொல்லரும்
வீரத்தன்மைவாய்ந்த தம்பியர் இலட்சத்தொன்பதின்மரும் மகாவிஷ்
ணு முதலியதேவர்கள் முனிவர்களுடன் சூழ்ந்துபோற்றப் பாலசுப்
பிரமணியர் வீற்றிருக்கின்றனரென்றும் இனிமேல் அவர்சகலசேனை
களுடன் பிரயாணப்பட்டுக் கடலைகடந்து இவ்விடம்வந்து தேவரீருட
ன் சண்டைசெய்ய நினைக்கின்றனர் என்றும் சொல்லச் சூரன் அதை
க்கேட்டு இனித் தாமதிக்கக் கூடாதென வீரர்களைப் பலதிசைகளி
லும் செலுத்தித் தன் தம்பி சிங்கமுகாசுரனையும் திக்குத்தீபாந்தரங்
களில் இருக்கப்பட்ட சேனைத்தலைவர்களையும் அனுபோகத்தில் வல்ல
வராகிய சுற்றத்தவரையும் முதியோர்களையும் தம்மிடம் வருவித்து
அவர்களை நோக்கிஇதனைச் சொல்வதாயினன். நம்குலப்பகைவர்கள்

ளாகிய தேவர்களை நாம் அரியசிறையிற்படுத்தி வருத்திவைத்திருப்பதை இந்திரன் தெரிந்து கயிலாசபதியினிடம் போய் அவ்வருத்தத்தைப் போக்கிவைக்கும்படி பிரார்த்தித்துக்கொள்ள அவர் ஒரு பிள்ளையைப் படைத்து அதனுடன் பலவெள்ளப் பூதரைக்கூட்டி அனுப்பி நம்முடன் சண்டைகொடுக்க அனுப்பிவைத் திருக்கின்றாராம். அப்பாலானவன் இப்போது சமுத்திரக்கரையிலிருக்கின்ற செந்திற்பதியை அடைந்து ஒரு தூதனை நம்மிடத்திற்கு அனுப்பினான். அவன் நம்மை மதியாமற்பேசி அனேகம் சேனைகளுடன் சேனைத்தலைவர்களை நிர்மூலப்படுத்தினமையுமன்றி எமது திருக்குமாரனையும் கொன்று போயினான். இவைகளனைத்தையும் நீங்கள் நன்கு ஆராய்ந்து மேல் நடத்தவேண்டிய காரியமொன்றை எமக்குத் துரிதமாகக் குறிக்கக்கடவீர்களெனச் சொல்லினான். அப்போது மந்திரிமுதலானவர்கள் தனித்தனி பின்வருமாறு பேசத்தொடங்கினர்.

எமது அரசனே! தாருகனையும் கிரவுஞ்சனையும் கணப்போதில் நாசம் செய்த வீரனைப்பாலன் பாலன் எனச்சொல்லுவதும் அவனுக்கு உதவியாக வந்திருக்கும் வலிய துணைவர்களைப் பைசாசங்களென்று இகழ்வதும் விசாலித்த சமுத்திரத்தைச் சுலபமாகத்தாண்டி அளவற்ற காவலையுடைய இப்பட்டணத்தைத் தீரனாய்த் தனி நின்று அவுணவீரர்களைக் கொன்றதன்றி உமது ஆசைக்குமாரனையும் கொன்றுபோனவனை அபலனாகிய தூதனென மதிப்பதும் பேரறிவினருக்கு அழகோ? ஆதியில் எப்போது தேவரீருக்கு ஓர்வித்தியாசம் தென்பட்டதோ அப்போதே காலதாமதமின்றி அப்பாலு சுப்பிரமணியன் பேரில் எதிர்த்துப்போய்ச் சண்டைகொடுத்து வாட்டித்துரத்தியிருப்பீராகில் இத்தகையநஷ்டமும் அவமானமும்நேர்ந்திருக்குமோ? மகதைஸ்வரியமமதையினால் அக்காலத்திற் செய்யவேண்டிய காரியங்களை முடிக்காமல் மறந்திருந்ததினால் இவ்விதம் நமக்கு நேர்ந்துவிட்டது. நூற்றெட்டு யுகங்களாய் ஆயிரத்தெட்டு அண்டங்களையும் ஏகசக்கிரமாய் ஆளப்பட்டீரனே! இந்திரஞாலத்தேரையும் யாளிவாகனத்தையும்கொண்டகெம்பீரனே! சலனமற்றதனுசையும் அக்ஷயதூணியையும் வேற்றிகொண்டல்லது மீளாதபாணங்களையும் பரமசிவகடாக்ஷத்தினாற் பெற்ற உமது இன்னும் அளவுபடாத பெருமைகளை

யெலலாம் ஒருவராற்கணித்துரைக்கக் கூடியதோ? அப்படியிருக்கப் புச்சைப்பாலனையும் அவன்விடுத்த தூதன் வீரங்களையும நீர் ஒருபொருட்டாக நினைத்து மயங்கி இவ்வளவுதூரம யோசிக்கக் கூடியதோ? தேவரீர் அப்பிள்ளையை எதிரியாகக் கொண்டு போர்புரியப்போதல் உமது சூரத்தன்மைக்கு அழகன்று. ஆதலால் இப்போதே எங்களில் ஒருவரைச்செலுத்தி அவர்களை வெற்றிகொண்டு நீர் களித்திருக்கக் கடவீரெனச்சொல்லினர்.

அப்போது மகா வீரதீரனாகிய சிங்கமுகாசுரன் தன் தமயனைப் பார்த்து ஓ! இராஜபரமேஸ்வரனே! இவர்களெல்லாரும் தங்களுக்கு இருக்கின்ற வீரங்களையும் வலியையும் விஜயங்களையும் சொன்னார்களே அன்றி உமக்கு இந்த அரசு நிலைபெற்றிருக்கும்படிக்கான காரணங்களை அறிந்து தெரிவித்தவரில்லை. தேவரீர் அடியேன் பேரிற் கோபியாது கேட்டருள் வீராக! இந்திரன் முதலிய விண்ணவரைச் சமுத்திரத்தின் மகரமச்சங்களைப் பிடித்துச் சுமந்துவைத்து நீர் ஒருவரன்றிப் பற்பலருக்கும்தினம்கொடுத்து வரும்படிக்குக்கட்டளையிட்டீர். அப்பாதகங்கள் வீணிற்போவதோ?கற்புக்கரசியாகிய இந்திராணியை இச்சித்துக்கொடிய இராக்ஷதர் பலரை ஏவியகாரணத்தினால் இந்திரன் அவளுடன் தன்பதியை இழந்து ஓடி ஒளிக்கச்செய்தீர். இவையுமன்றிப் பொன்னுலகை அக்கினிதேவனுக்கு இரையாக்கிச் சீரழித்து அவன் பிள்ளை சயந்தனையும் தேவர்களையும் அரியசிறையில் வைக்கச்செய்தீர். தேவர்கள் பரமனைக்குறித்து இக்காரணங்களை முறையிட்டுக் கொண்டதினால் இப்படிப்பட்ட துன்பங்கள் நமக்கு வந்து சேர்ந்தன. பின்னால் இன்னும் கெடுதி சம்பவிக்கும் என்பதை நீர் செல்வச் செருக்கினால் மறந்து பித்தனைப்போலத் திகைக்கின்றீர். ஆதியில் பரமசிவன் இந்தச்செல்வங்களை நூற்றெட்டு யுகங்கள் அனுபவித்திருக்கும்படிக்கு வரம்கொடுத் திருக்கின்றார். அத்தவணை இதுவரை முடிந்தது. விதிவலியினால் நீர் அதனைமறந்தீர். இதன்றியும் பரமசிவம் உங்களை யாவரும் வெல்லமாட்டார்கள் என்றும் நமது சத்தியானது உங்களைக்கண்டித்து விடுமெனவும் கடாக்ஷித்தருளியிருக்கின்றாரே? அதற்குத் திருஷ்டாந்தம் தாருகனிற் கண்டுகொள்ளும். அரசனே! இவைகளையெல்லாம் தீர்க்கமாயோசித்து இப்போதாவது தீனராகிய தேவ

ர்களைச் சிறையில் நின்றும் நீக்கிவிடுவீராகில் குமாரதேவர் உம்மீது சண்டைசெய்ய வராமலிருக்க மாட்டார். இல்லையானால் அவர் துரிதமாக அவுணப் பூண்டில்லாமற் களைந்து நம்மையும் வெற்றிவேலினாற் பிளந்து கொல்வது நிச்சயம். ஆகையால் நீர் சீக்கிரம் பிழைக்கும்மார்க்கத்தைத் தேடிக்கொள்ளக் கடவீரெனச் சிங்கமுகன் சொன்ன வசனங்கள் சூரன் செவிகளிற் சுறுக்கிடப்பட்ட மாத்திரத்தில் அவன் அடா! தம்பீ! நல்லயோசனைகளைக் குறித்துக் காட்டினை! வெகு நேர்த்தியாக இருக்கின்றது. இந்தப் பஞ்சைகளுக்குப் பயந்து உனக்கு இந்த ஏழைமதி கிடைத்தவாறென்ன அதிசயம்? பரமசிவம் நமது சம்பத்துக்களுக்கு அழிவு வருமென்று குறித்ததையும் சத்திப் படையானது நம்மை வெல்லுமெனச்சொன்னவாக்கியத்தையும் நான் கேட்டதே இல்லாதிருக்க உனக்கு மட்டும் தனித்துக் காட்டினாரோ? இப்படிப் பயந்தவனென்று முன்னம் தெரிந்திருந்தால் அப்போதே உன்னை இச்சபைக்கு அழைத்திருக்கமாட்டேன். ஆதலால் நீ துரிதமாய் உன்பட்டணம் சேர்ந்து மூலைவீட்டில் ஒளித்துக்கொண்டிரு. நான் இதோ அப்பாலன் முதலியவர்களை ஒரு கணப்பொழுதிற் செயித்து வெற்றிக்கொடியோடு மீளக்கடவேனெனச் சூரன் பலவிதங்களிலும் அவனை அவமதித்து அவன் வாசகங்களைக்கேளாமல் தான் கொண்டதே கொள்கையாகப் பேசியகாலத்திற் சிங்கமுகன் இதனைநினைக்கின்றான். தமயனுக்கு நாம் பிழைக்கும் உறுதிகளைச் சொன்னோம். ஆனால் விதியை வெல்ல யாராலாகும்? வேம்பு எட்டி இம்மரங்களுக்குத் தேனையும் பாலையும் கலந்துவிட்டு வளர்க்கினும் அவைகளின் சுபாவமாகிய கசப்பு நீங்குதலில்லை. ஆதலால் இனிநாமும் இவருக்கு முன்னமே குமாரதேவர் வெற்றிவேலினால் மாளக்கடவோமெனத் தீர்மானித்தவனாய்ச் சீக்கிரத்தில் எழுந்து சூரன் பாதாரவிந்தங்களில் வீழ்ந்து சேவித்து அவன் கோபந் தணியும்படிக்குப் பின்வருமாறு கூறுவதாயினான். அண்ணா! அடியேன்மீது கோபங்கொள்ளவேண்டாம். சிறியேனாதலால் ஏதோதெரியாத புத்தியினாற் சிலகருமங்களைச் சொல்லிவிட்டேன். அக்குற்றங்களைப் பொறுத்து இரட்சிக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்ட காலையிற் சூரன் மனம்பூரித்துத்தம்பியைத் தழுவிக்கொண்டு இதனைச் சொல்வதாயினன். அப்பனே! நீ சீக்கிரம் உன்பதியைச் சேர்ந்து சகலசதுரங்கசேனைப் பெருக்

க்களையும் அழைப்பித்துக் கொண்டு விஜயத்துடன் களித்திருக்கக்க டவாய். ஒருவாறு சிவகுமாரன் சண்டையைக்குறித்து இவ்விடம் சீக்கிரம் வருவான் போலிருக்கிறதென்று அவனுக்குச் செலவுகொடுத்தனுப்பித் தான்சபையைக் கலைத்து அரமனையைச்சேர்ந்து இந்திர போகத்தினும் மேலான செல்வங்களை அனுபவித்திருந்தனன். இவை நிற்க இனித்திருச் செந்திற்பதியில் எழுந்தருளி இருக்கும் நம்சரவணபவன் நடத்திய செயல்களை உரைப்பாம்.

3 வது மகேந்திர காண்டம் முற்றிற்று.

———(o)———

உ

வெற்றிவேலுற்ற துணை.

4. வது உயுத்தகாண்டம்.

விருத்தம்.

நாரணனென்னுந் தேவு
நான்முகத்தவனு முக்கட்
பூரணன் றானுமாகிப்
புவிபடைத் தளித்துமாற்றி

யாரணமுடிவுந் தேறு
வனுதியாயுயிர் கட்கெல்லாங்
காரணனாய மேலோன்
கழலினைக்கருத்துள் வைப்பாம்.

வீரவாகுதேவர் சூரபதுமனைக்கண்டு வார்த்தையாடித் திரும்பி வந்து பாலசுப்பிரமணியக் கடவுளைச் சேவித்து அவுணராஜன் கருத்தைத் தெரிவித்தவுடன் மறுநாட்காலையில் அவுணர் பூண்டைவேரறக் களைவதாகச்சிவகுமாரன் வாயுதேவனாற்கொண்டுவந்து நிறுத்தப்பட்ட இரதத்தின்பேரிற் சகலதேவரும் புடைசூழ வந்தமர்ந்து அவர்கள் எல்லாரையும் தங்கள் தங்கள வாகனங்களில் ஏறிவரத்திருவாய்மலர்ந்து தாம் சூரன்பட்டணத்தை நோக்கிப் பிரயாணமாயினர். இவ்வித

மரக்த் துணைவர் தேவர்கள் சேனைசமுத்திரமுதலாகச் சூழ்ந்து போற்ற நடுநாயகமாய்க் குமாரதேவர் அவர்களுக்கு மத்தியிற் போவதை வானத்தில் நெருங்கியிருந்த தேவர்கள் கண்டு அளவில்லாத ஸந்தோஷத்தினால் ஆடிப்பாடிப் பஞ்சதருக்களினது புஷ்பங்களை வாரி வாரி ஜெய ஜெயவென்னும் ஓசையெழ இடைவிடாது தேவசேனாபதியின் பேரிற் சொரிந்தனர். அளவில் அடங்காத பெருமைகளுடன் அலைவரும் சமுத்திரக்கரையைச் சேர்ந்தவுடன் சேனைகளானவைகள் சமுத்திரத்தை ஒரு பொருட் படுத்தாமல் அதில் நடத்துபோவதாயின. பாலசுப்பிர மணியக்கடவுளானவர் வானவழிக்கொண்டு போவதாயினர். இவ்விதம் சொல்லும்போது சூரபதுமன் வாசஞ்செய்யும் மயேந்திரபுரியை அங்கு அருகிற்கண்டு மகாவிஷ்ணு முதலானவர்கள் சுப்பிரமணியக் கடவுளைப்போற்றி இதை விண்ணப்பஞ்செய்வதாயினர் கர்த்தனே! அதோ சுவர்னமயமாய் விளங்கும் பட்டணத்திற் பாதகர் வாசம் செய்திருப்பதால் நாம் அருகிற் சேராமல் இவ்விடத்தில் தானே பாசறை உண்டாக்கி அதிலிருந்து மேல் நடக்கவேண்டிய காரியங்களுக்குத்தகுந்த யோசனை செய்யவேண்டுமென்று விண்ணப்பிக்கக் குமாரதேவர் உத்தமமென்று பக்கத்தில்வரும் சிற்பியைப்பார்த்து அவ்விடத்தில் விசாலமாகிய பாசறையை விரைவிற் சிருஷ்டிக்கக்கடவாயெனக்கட்டளையிட்ட மாத்திரத்தில் தேவதச்சனானவன் வேண்டிய சகலசௌகரியங்களுடன் சிருஷ்டித்து முடித்து அதற்கு எமகூடமெனப் பெயருமிட்டுக் கர்த்தனை வணங்கி நிற்கச்சிவகுமாரன் பிரமன்விஷ்ணு முதலானவர்கள் சூழ்ந்துவர அந்தப்படைவீட்டைச்சேர்ந்து இரதத்தை விட்டிறங்கி உள்ளே பிரவேசித்து அதன் வளப்பங்களுக்கு ஸந்தோஷமுற்றுச் சிற்பியின் வல்லபத்திற்கு மெச்சிஅவன்மீது கிருபாநோக்கம் பரப்பிப்பூத வெள்ளங்களை அவ்வவர்கள் சாலைகளிற் போகும்படி செலவுகொடுத்துத்தமக்கு ஏற்படுத்தியிருக்கின்ற சொர்னத்திருமாளிகையிற் போய்ச் சிம்மாசனத்தில் வீற்றிருந்தனர். மற்றத்தேவர்கள் நெருங்கிப் போற்றி அக்கடவுளுக்குப் பணிவிடைகள் செய்திருந்தார்கள்.

இப்படியிருக்க, நாரதமுனிவரானவர் சகலவைபவங்களுடன் சபாமண்டபத்தில் வீற்றிருக்கும் சூரபதுமனிடம்போய் அவனுக்கு

அளவற்ற ஆசிகள் கூறிநிற்க, அதுகண்டு அவன் அய்யரைநோக்கி விருத்தனாயிருக்கப்பட்ட நீ யாவன் எனக்கேட்க மகாமுனிவர் என்பெயர் நாரதனெனச் சொல்லுவார்கள். இப்போது ஒரு காரணத்தைக் கண்டபடியால் அவசியம் அதைத் தேவரீருக்குத் தெரிவிக்கத் துரிதப்பட்டுவந்தனன். அஃதென்னையெனில், தேவர்கள் சூழச்சிவபிரான் அருளிய குமாரதேவன் சமுத்திரத்தைக் கடந்து இப்பட்டணத்தின் வடபாரிசத்தில் வந்து பாசறைவிடுதி ஒன்று அமைத்து அதில்தங்கி இருக்கின்றனன். தேவரீர் அவர்களை அவ்விடம் விட்டுத்துரத்தும்படி கேட்டுக் கொள்ளுகிறேனென்று சொன்ன மாத்திரத்திற் சூரபதுமன் ஆலத்தைப்போற் சிறிப்பற்களைக்கடித்து அனலெழநகைத்து இதனைப்பேசுவதாயினன். ஆயிரத்தெட்டண்டங்களையும் வென்றரணரங்க சூரனாகிய நாம்வாசஞ்செய்திருக்கின்ற பலகாவல்களையுடைய இப்பட்டணத்தின் பேரில் ஒருபாலனோ போருக்குவருபவன்! அவனையும் அவனுக்கு உதவியாக வந்தவர்களையும் நமது வீராதிவீரனாகிய புத்திரன்பானுகோபனைக்கொண்டு சின்னபின்னப்படக் கொல்லுவிப்பன்! அதை நீயேபார்க்கப் போகின்றாயென்று அவுணருக்கரசன் கோபித்துச்சொல்ல நாரதர்கேட்டுத் தேவரீர் சீக்கிரம் கந்தனைவாட்டிச் சவுக்கியத்திலிருமென்று வெளிக்கு ஆசிகூறினவராய்த்தமது இருப்பிடம் சென்றார். சூரன், பக்கத்தில் நின்ற தூதுவரைநோக்கிக்கடற் கிறைவனை இந்நிமிஷம் இங்கு கொணர்வீரெனக் கட்டளையிட்டவுடன் அவர்கள் ஓடிச் சமுத்திரராஜனை இழுத்துவந்து சூரன் முன்விட்டார்கள். சூரன் அவனை உக்கிரமாகப் பார்த்துக் கடற்கிறைவனே! நீநமது கட்டளைக்கு அடங்கி நடப்பவனாகக் காணப்படவில்லை. நம்முடைய பேரில் எதிர்த்து வந்த சிவகுமாரனைப் பூதப்படைகளுடன் இப்பட்டணத்திற்கு வரும்படி வழிவிட்டு உறங்கிக் கிடந்தனையோவெனச் சீறிக்கேட்டகாலத்திற் சமுத்திரராஜன் திகிற்பட்டு வாய்புதைத்து இராஜாதிராஜனே! தேவரீர் குறித்த சுப்பிரமணியன் மகாவிஷ்ணு முதலான தேவர்களுடன் ககனமார்க்கமாய் வந்தனன். பூதவெள்ளங்களும் சேனைத்தலைவர்களும் என்மூலமாகத்தான் சென்றபோதிலும் நான் அவர்கள் பாதங்களின் வலிக்கு ஆற்றாமற் போனேனென்று சொல்லிப்பயந்து நிற்கும்போது சிலதூதர் ஓடிவந்து இராஜாதிராஜனே! விஷ்ணுபிரமன் இந்திரன் முதலான தேவர்கள் நவவீரர்கள் இலக்ஷசர்கள் சேனைத்தலைவர்

கள் இரண்டாயிரவெள்ளப் பூதப்படைகள் சூழச்சிவகுமாரன் வந்து தங்கி இருப்பதை யாங்கள் கண்களாரக்கண்டு வந்தோமென்று சொல்லினார்.

முதல் நாள் பானுகோபன் யுத்தம்.

அதைக்கேட்ட சூரபதுமனானவன் வடவையைப்போற் சீறிச்சரவணபவன் வீறுப்பை இந்நிமிஷம் அடக்குகிறேனென்று தூதுவரை நோக்கித் துரிதமாய்ப் பானுகோபனை அழைத்து வாருவீரெனக் கட்டளையிட அவர்களோடி அவனாகத்தில் வணங்கித் தெரிவித்த மாத்திரத்திற் பானுகோபன் பிரயாணப்பட்டுத்தன் பிதாவினிடம் வந்து அடியேனைவருவித்த காரணமென்ன வென்றுபணிந்து கேட்கச் சக்கிரவர்த்தியானவன் பிள்ளையை அருகில் அழைத்துத் தழுவிக்கொண்டு நீ உன்சேனைகளைக் கூட்டிக்கொண்டு துரிதமாகப்போய் நமது பட்டணத்தின் வடபாரிசத்திற் பாசறைகட்டி அதில் விஷ்ணுவாதி தேவர்களுடன் சண்டைக்குவந்து பூதப்படைகளுடன் தங்கி இருக்கும் சிவகுமாரனாகிய சரவணபவனை மடக்கிச்சாடி வெற்றிகொண்டு மீளக்கடவாயென்று கட்டளையிட்டவுடனே பானுகோபன் பாலசுப்பிரமணியனை நான் திகைத்தோடும்படிக்குச்சாடி மந்திராலோசனைக்கு உரியவராய் அங்கு அமர்ந்திருக்கும் மகாவிஷ்ணுவையும் பிரமனையும் தேவரீருக்குப்பயந்து ஒளிந்திருக்கும் இந்திரக்கள்வனையும் பாசக்காற்கட்டி வந்து உமது சந்நிதானத்தில் அவர்கட்குத்தக்க தண்டனை செய்யும்படிக்குக் கொண்டு வரக்கடவேனென்று வருதிபெற்றுத் தன் அரமனைக்குச் சென்று சண்டைக்குச்சகல சயினியங்களும் தலைவர் சகிதம் சன்னத்தப்பட்டிருக்கும்படி கட்டளையிட்டுத்தான் ஆயுதசாலைபுட்புகுந்து போர்க்கோலங்கொண்டு வீரலெட்சுமியைத் தொழுது வெளிப்பட்டு அண்டங்குலுங்க ஆர்ப்பரிக்குஞ் சேனை வெள்ளங்களைக் கண்டு ஸந்தோஷித்துத் தான் தன் இரதத்திலேறி உட்கார்ந்து அதைத் துரிதமாய்ச் சிவகுமாரன் இருக்குமிடத்திற் சேர்க்கக்கடவாயெனச் சாரதிக்கு கட்டளையிட்டவுடன் அவன்செலுத்த இரதமோடும் அதிர்ச்சியைக் கேட்ட சூரியன்திடுக்கிட்டு இன்னும் நமக்கு என்ன கேடுவிளையுமோ வெனமயங்கி இருக்கின்றபொழுது அளவற்ற வெள்ளம் இரதகஜதுரகபதாதிகள்சூழப்பானு கோபனானவன் வீராவேச

த்துடனவரும சிறபபைபபார்த்த நாரதரானவர் அதிசீக்கிரத்திற் குமாரதேவரை விழிகளிக்கத்தெரிசித்து அவர் திருவடிகளிற் பணிந்தெழுந்து புகழ்ந்துபோற்றி விண்ணப்பம் செய்வதாயினர். கர்த்தனே! தேவரீர் இவ்விடம் சேர்ந்து தங்கியிருப்பதைத் தூதுவர்மூலம் சூரபதுமன் றெரிந்து தன் மூத்தபிள்ளையாகிய பானுகோபனை யுத்தசன்னத்தனாய் அனுப்ப அவன் இதோ வீறிவருகின்றான். இவனை வெல்வது அரிது. தேவரீரே சற்று வருத்தமெடுத்துக் கொண்டு வெற்றிகொள்வது நன்மையாகும் எனப்பணிந்தனர். பாலசுப்பிரமணிய தேவர் சிறுநகை கொண்டவராய் வாளாயுத்தத்தைக் கரத்திற் கொண்டு காத்திருக்கும் வீரவாகுதேவரைக் கிருபையாகப் பார்த்தருளி நீ உன் சகோதரர் எண்மர் இலட்சருடன் ஆயிரவெள்ளம் பூதப்படைகளுடன் போய் மயேந்திரகிரியை முற்றுகைபோட்டுக் கோட்டைமதிள் உறுப்புக்கள் கோபுரங்கள் மாடமாளிகை முதலிய அனைத்தையும் துகள்பட இடித்து நாசஞ்செய்யக்கடவாய். அக்காலத்திற் சூரன் புத்திரன் எதிர்த்து வருவானாகில் நீ தீரனாய் வளைத்து அவனை வெற்றிகொள்ளக்கடவாயெனக்கட்டளை யிட்டனுப்பினர். அப்படியே தேவர், அவர்கள் அனைவருடன் சென்று கோட்டைமதிலைக் கிட்டினவுடன் பானுகோபனுடன் வந்த சதுரங்க சேனைகளும் நாற்புறங்களினும் சூழ்ந்து கொண்டு சர்வாயுதங்களையும் கரவேகமாகத் தூண்டிப்பூத வீரர்களின் பேரிற் சொறிவித்து நாசப்படுத்தினார்கள். அக்காலையிற் பூதர்கள் மராமரங்களையும் பருவதங்களையும் பறித்துப்பந்துகளைப்போல வீசி அவுணச்சேனைகளை மடித்தார்கள். அனலியென்னும் இராட்சதச் சேனைத்தலைவன் கோபமுற்றுத் தனதுவில்லில் அக்கினி யாஸ்திரத்தைத் தொடுத்து ப்ரயோகித்துப் பூதப்படைகளை வாட்டிவதைக்கக்கண்ட இலட்சர்களிலொருவனாகிய சிங்கனென்னும் வீரன்கோபமுற்றுத் தண்டாயுதமொன்றைச் சுழற்றி அவனை மோதிச்சாடிய காலையில் இராட்சதவீரன் அவ்வீரனைத் திவ்யாஸ்திரங்களினால் அதிககாயப்படுத்த அவன் சலியாமற் பாதகன் தேரிற்பாய்ந்து அவனது ஒருகரத்தைத்திருகி முறித்தெறிந்தான். அவுணவீரன் மற்றொருகரத்திற் கதைகொண்டு சிங்கன் சிரத்தில் மோதினான். பூதசேனாபதி தண்டம் கொண்டிருக்கும் அவன் கரத்தைப்பற்றி இழுத்துக் கிறுகிறெனச் சுழற்றி அப்பாதகன் வீறுப்பனைத்தும் குறைத்துக்கடைசியில் அவனை ஓங்கிப்பூமியில் அறைந்து கொன்றனன்.

அதைக்கண்ட சண்டனென்னும் அவுணவீரன் கோபித்துச்சிங்கன் பேரிற் பாணங்களை விடுத்துவர அவன் இறந்துகிடக்கும் அனலிகரத்தின் தண்டத்தைப்பிடுங்கிக்கொண்டு அவ்வீரன்தேரிற்பாய்ந்து அவன்தோளிற் சாடினான். அத்தாக்கலைச் சகிக்கமாட்டாதவனும் சாய்பவன் தண்டத்தாற் சிங்கன்மார்பிலும்மோத இருவீரரும் மூர்ச்சித்து வீழ்ந்தனர்.

அதைக்கண்டு முடுகிவரும் மாயனென்னும் அவுணவீரனைப் பூதத்தலைவனாகிய நீலன்கண்டு அவனுடன் பலவிதங்களிற் போராடிக் கடைசியில் அவனை மிஞ்சி அவன்கண்டத்தினைக் கடித்துப்பெருகும் உதிரத்தைக்குடித்து அவன் உயிரைப் போக்கினன்.

முன் மூர்ச்சித்திருந்த இருவீரரும் தெளிந்தெழுந்து பிரமாதப் போராட்டஞ்செய்து கடைசியிற் சிங்கனால் அவுணவீரனாகிய சண்டன் மாண்டான்.

அதுகண்ட அசமுகனென்னும் இராக்கதவீரன் சிங்கன் மீதில்உருத்துவருவதை பதுவென்னும் பூதத்தலைவன் கண்டு அவனை எதிரில் மறித்து நில்லென்று கோபித்துப்பேசுவதை அசமுகன்கேட்டுவிழிகளில் தீப்பறக்கப் பூதத்தலைவன் பேரில் அதிக்கிரமித்துக்கொடிய பாணங்களை அபரிமிதமாகச் செலுத்தினான். பூதத்தலைவன் நகைத்து அதனைச் சட்டைபண்ணாமல் அப்பாணங்கள் தன் சரீரமுற்றும் பட்டு உதிரவெள்ளம் பெருக்கெடுத்தோட நின்ற விடத்தினின்றும் இராட்சத வீரன் ஏறியிருக்கின்ற தேரிற்பாய்ந்து நின்று கர்ச்சித்த மாத்திரத்தில் இராட்சதவீரன் திடுக்கிட்டு நிலைதப்பிக்கரத்திற் பற்றிய வில்லையும் நழுவவிட்டுக் கிலேசித்திருப்பதைப் பூதத்தலைவன் கண்டு அடா! இராட்சதப்பயலே! நமது கர்ச்சனைக்கு ஆற்றாதவனோ என்னுடன் யுத்தம் புரியவல்லவன்? உன்னை நான் ஒன்றும் செய்யவில்லையெனத்தேரை விட்டு நிலத்திற் பாய்ந்தனன். இராட்சதவீரன் வெட்கமுற்று நான் உயிரைவளர்த் திருப்பதினும் இவனுடன் போராடிவென்றாவது மாண்டாவது அபவாதத்தைத் தீர்த்துக்கொள்ளக் கடவேனென்று ஆலத்தைப்போற்சீறிவில்லிற் கரோமாகிய பாணங்களைத் தொடுத்துப் பூதவீரன்மேற் பிரயோகித்துச் சிருங்கநாதம் செய்

தான. இதனைமதுவென்னும் வீரன்கண்டு அவனுடன்பலவிதங்களிற் போராடி நிற்கக் கடைசியில் அவுணவீரன் நாராயணாஸ்திரத்தையேவினான். அவ்வஸ்திரம கிட்டிவந்து பூதத்தலைவன் நிராயுதனையும் சிவபத்தனையும் இருப்பதைப் பார்த்து அவனை விட்டுத் திரும்பித் தன்னை விட்ட இராட்சதப் பாதகன் சிரத்தைக் கண்டித்துத் தள்ளி விஷ்ணுவினிடத்திற் சேர்ந்தது.

இந்தச்சம்பவத்தைக் கண்ட இராட்சதச்சேனைகள் கலக்கமுற்று இப்படிச்சண்டை செய்யவல்ல வீரர் இனியாவர் இருக்கின்றனர் என்று புலம்பி வாடினர். பூதப்படையின் ஜெயிப்பையும் தேவர்கள் செருக்கையும் இராட்சதப்படைகள் சஞ்சலங்களையும் கண்டு அவுணவீரர் தங்கள் சேனைகளுக்குத் தயிரியங்களைக் கூறிப்பூதச்சேனைகளை வளைத்துப்பாணங்களை அமோகமாய் விட்டு அவர்களை நாசஞ்செய்தபோது அவர்கள் சகிக்கக்கூடாமல் திசைகளெங்கும் பறந்தோடி ஒளிக்கத்தொடங்கினர். இதை இலட்சர்களில் ஒருவனாகிய தண்டகனென்னும் வீரன் கண்டு நம்மவர்கள் இப்பாடுபடுவதோவென்று சீறித்தனது வில்லிற் கணக்கிறந்த கடூரப்பாணவிதங்களைப் பிரயோகித்துச் சாடும்போது இராட்சதசேனைகளும் சின்னபின்னப்பட்டு மானத்தையும் வீரத்தையும் பறிகொடுத்துத் திசாதிசைகளினும் பருவதச்சாரல்களினும் ஓடிப்பதுங்கினர்.

வீராதிவீரனாகிய பானுகோபன் இதைக்கண்டு வடவையைப்போற் கொதித்து இதனைச்சொல்லுகின்றான். நாம்பட்டணத்தைவிட்டுப் புறப்படும்போது இரதகஜதுரக பதாதிகள் இருபதினாயிரம் வெள்ளங்களுடன் வந்தோம் இப்போது நம்மைச் சூழ்ந்திருக்கின்றவர்களைப்பார்க்குமிடத்தில் ஆயிரம் வெள்ளம் சேனைகளிருக்கும்போலிருக்கிறது. இனிநானே பகைவர்களை வாட்டிக்கொல்வேன். இந்த வெற்றியைப் பெறுமற்போவேனேயாகில் நான்சூரபதுமன் குமாரனாகமாட்டேனெனச் சபதம்பேசித்தனது வெற்றிவில்லிற் கொடூரமாகிய பல பாணங்களை ஊழிமேகங்கள் ஒன்றுபட்டுவருஷிப்பதைப் போலப்பிரயோகிக்கத் தலைப்பட்டான். பூதப்படைகள் பருவதங்களையும் மராமரங்களையும் பறித்துச்சாடி ஆர்ப்பரித்து மேலிட்டுவருகின்ற அவன் பாணப்பெருக்கைத்தடுத்து ஊங்காரிப்பதைப் பானுகோபன்

கண்டு தனது ஒப்பற்றவில்லின் வலிமையினாலும் புஜபலத்தினாலும் பூதச்சேனைகளை முற்றிலும் அல்லோலகல்லோலப்பட அதப்படுத்த அவர்கள் சகியாதவர்களாய் நிலைகுலைவதை உக்கிரசேனனென்னும் படைத்தலைவன் கண்டு பூதகணங்களைப் பயப்படாதீர்களெனக்கையமர்த்தி அதிவேகமாய்ப் பாரித்ததண்டமொன்றைத்தன் கரத்திற்கொண்டு போர்க்களத்தை நோக்கிவருவதைப் பானுகோபன்கண்டு தனது வில்லில் ஆயிரக்கோடி பாணங்களைச் சந்தித்துவிட்டு வருகின்றவன் தேகம் தெரியாமல் மறைத்துச் சிருங்கனுதஞ்செய்தான். அவைகள் உக்கிரசேனன்மேல் தாக்கித் துளைக்கச்சக்தியில்லாமல் முனைமழுங்கிக் கீழேவிழுந்தன. பாணங்கள் பயன்படாமல் மழுங்கியதைப் பானுகோபன் கண்டு அவ்வீரனை மெச்சி மழுவாயுதத்தைப் பிரயோகம்பண்ணினான். அதை உக்கிரசேனன் தனது கதையினால் தூள்படத்தாக்கி உடனே பானுகோபன் தேரின்பேரிற் குதித்துக் குதிரைப்பந்திகளைக் கொன்று திரும்பினான். பானுகோபன் ஒருபாணத்தால் உக்கிரசேனன் தண்டத்தைப் பொடிசெய்தான். உக்கிரசேனன் பானுகோபன்இரதத்தைவாரிவானத்தில் வீசினான். இரதமானது திரும்பிப் பூமிக்கு அடுத்து வருங்காற் பானுகோபன் அதினின்றுங் கீழேகுதித்து உக்கிரசேனனை வாரிமேலே வீசிப்பிரமதேவரிடம் தான்பெற்ற வேலை அவன்பேரிற் பிரயோகம்பண்ணினான். அது உக்கிரசேனன் மார்பில்தாக்கி உருவியோடிய அளவில் அவன் நிலத்தில் விழுந்து களைத்தனன்.

இச்சம்பவத்தைக்கண்ட தண்டி என்னும் பூதப்படைத்தலைவன் பானுகோபன் மீதில் வந்தெதிர்த்துப் பலவிதப் போராட்டங்கள் செய்து கடைசியில் அவனுடைய பாணத்தால் திகைத்து அசைவற்று நின்று விட்டனன்.

பினுகியென்னும் பூதநாயகன் சிறிப்பருவதமொன்றைப் பறித்துவீசுமுன் பானுகோபன் அவன் மார்பைப் பாணங்களாற் சல்லடைக்கண்களாகத் துளைத்தனன். இதைக்கண்ட பூதசேனைத்தலைவர்கள் சிறிப்போராடிய சமயத்திற் பானுகோபன் தன்வில்லானது ஏககாலத்தில் இருநுனைகளும் ஒன்றுபட்டிருக்கும் படிக்குக்கரவேக

மாய்க் கொடியகணைகளைச் சோனைமாரிபோற் சொரிந்துசாடி அவர்களைப் பின்னிடைந் தோடும்படி துரத்தினான்.

அதுகண்டு மிகவலியுடைய இலட்சர்கள் இரவுத்திராகாரமாகக் கோபித்துக் கொடியபாணங்களை ஏராளமாகச் சொரிந்தனர். பானுகோபன் அவைகளை யெல்லாம் கண்டித்து நூறுநூறாயிரம் பாணப் பெருக்கையேவி அவர்களனைவோர்களையும் சல்லடைக் கண்களாகத் துளைக்க அவர்கள் எதிர் நிற்கமாட்டாமற் பின்னிடைந்தனர். இத்தகைய பானுகோபனுடைய திறத்தினை யாவரால் எடுத்துரைக்கக் கூடும்!

பின் நவவீரர்களில் ஒருவனாகிய வீரகோளரி என்பவன் வெகுண்டு கணக்கிறந்த பாணங்களை விட அவைகள் பானுகோபன் மார்பில்தைத்து உருவிப்போக அவன் சற்று வருந்தித் தேறி நாராயணாஸ்திரத்தை யெடுத்து விட்டனன் அதுவேகமாய் வந்து வீரகோளரி மார்பில் தாக்கிப் பிராணச்சேத மில்லாமல் அவனை மூர்ச்சையாகக் கிடத்திப் போய்விட்டது.

இவ்விதம் தன் துணைவனுக்கு நேர்ந்த அபாயத்தை வீரமார்த்தாண்டன் கண்டு பகைவன் முன்தேரைச் செலுத்திவந்து பாணங்களைப் பிரயோகிக்குமுன் பானுகோபன் மிஞ்சிச் சரங்களையேவி வீரமார்த்தாண்டன் நெற்றியில் அழுத்தி அவன் இரதத்தையும் புரவிகளையும் கண்டித்து அவன் மார்புக்கிலக்காகப் பாணங்களை விடுத்தனன். அவை அவன்பேரில் தாக்கி முனைமழுங்கி வீழ்ந்தன. உடனே வீரமார்த்தாண்டன் கோபங்கொண்டு பானுகோபன் பேரிற் பாய்ந்து அவன் வில்லைப்பறித்து ஒடித்தெறிந்தனன். பானுகோபன் வாளை உருவி அவன் மார்பிற்குத்தினான். அவன் சட்டைபண்ணாமல் தன் வாளினால் பானுகோபன் வயிரக்கவசத்தைப் பொடியாக்கினான். பானுகோபன் மீளவுந்தன்வாளினால் வீரமார்த்தாண்டன் கண்டத்தில் உருவும்படிக்குச் சொருகிவாங்கிய காலையில் அவன் செத்தவனைப்போல விழுத்தனன்.

பின் வீரராக்கத னென்பவன் வந்தெதிர்த்துப்போர்புரியக்கடைசியிற் பானுகோபன் வேலானது அவன் மார்பில்தாக்கிய மாத்திர

த்தில் அவன் நிலத்தில் வீழ்ந்து சோர்ந்தான். மீதமான அஸுரவீரர்களும் தங்கள் தங்கள் தேரைச்செலுத்தி வந்து பானுகோபனை வளைத்து அகோரமான சண்டை விளைக்கப் பானுகோபனும் கணக்கிறந்த கொடிய பாணங்களைச் செலுத்தி அவர்கள் சரீரமுற்றும் துளைத்து வாட்டியபோது அவர்களில் இருவர் செயலற்று நின்றனர். ஒருவன்மூர்ச்சித்து வீழ்ந்தனன். மற்றிருவர் பயப்பிராந்தியினால் ஓடிப்போயினர்.

இவ்விதமாகப் படைவீரர் இலட்சர் எண்மர் பூதப்படைகள் முற்றும் நிலைகுலைந்து பறக்கும்படிக்கு வெற்றிகொண்டு பானுகோபன் எதிரின்றி வீரபராக்கிரம சாலியாய் இரணக்களத்தில் உலவுந் தீரத்தை நந்திகணத்தலைவராகிய வீரவாகுதேவர் தெரிந்து சிவகுமாரன் சரணாரவிந்தங்களைச் சிந்தித்துப் போர்த்தொழிலுக்கு எழுவதாக மனங்கொண்டவராய்ச்சூரன் குமாரனிருக்கிற இடத்துக்குத் தனது தேரைச்செலுத்தி மேருவையொத்த தனுசைவளைத்து டங்கார வோசைகளைக்காட்டி வருகின்ற தீரத்தைப் பானுகோபன் பார்த்து இவனைச்சுலபமாக நினைக்கக்கூடாதென்று தனது வில்லை நாணேற்றிக் குணத்தொனிசெய்து எதிர்த்து நின்றனன். அப்போது இந்தப்பிரபலச் சண்டையைப் பார்க்கவேண்டுமென்று பிரமன் விஷ்ணு இந்திராதிதேவர்கள் ரிஷிகள் வானவெல்லை முற்றும் நெருங்கி இருந்தனர். பானுகோபன், நற்குணநற்செய்கைகளை உடையவீரவாகுதேவரைப்பார்த்து உன்னைப்பார்க்குமிடத்தில் நமதுநகரத்திற்கு முன்னுதாக வந்து பலஅக்கிரமங்களைச் செய்து தப்பி ஓடிப்போனவனாகத் தோன்றுகின்றது, இப்போது சூராதி சூரனாகிய என்னிடம் யுத்தம்செய்யும்படிக்கு நீ வந்து அகப்பட்டுக் கொண்டபடியால் நான் தப்பவிடாமல் உன்னைக்கொன்று அந்தச் சுப்பிரமணியனையும் வென்று அவனைச்சேர்ந்த சகலரையும் சிறைப்படுத்திப் பாரவிலங்கிடவல்லேனென்று சபதங்கள் பேசியகாலையில் வீரவாகுதேவர் அவனைப்பார்த்து வீண்வார்த்தைகளில் ஆவதென்ன? நீ சூரனாகில் என்னோடு யுத்தம்செய்து வெல்வாயெனச் சொன்ன அளவிற்பானுகோபன் கோபங்கொண்டு பலவித சங்கையற்ற பாணங்களைப் பிரயோகம் செய்தான். அவைகளை யெல்லாம் தேவரானவர் அப்போதைக் கப்போது கண்டித்துத் தள்ளினர். இவ்விதம் ஒருவர்மீது ஒருவர்கணைகளைச் சொரிந்தும் கண்டித்தும் விழிகளுக்குப் புலப்படாமல் மறைந்

னும் மீளத்தோற்றியும் இமைப்போதிற் பற்பலவித்தைகளைக் காட்டி யும் வீரங்களைப்பேசியும் உருத்துப் பார்த்தும் புஜங்களைத்தட்டியும் சூராவளியைப்போற் சுழன்று சுழன்று போரைச்செய்து வருங்காலை யில் வானத்து வேடிக்கை பார்த்திருந்த தேவர்கள் ஓடி ஒளித்தனர். அப்படிக்கான கொடியபோரின் பெருக்கை எத்தகையராலும் விரித் துச் சொல்லக் கூடியதன்று.

இப்படிச்செய்து வருகின்றவேளையிற் பானுகோபன் கைமிஞ்சி வீரவாகு தேவர்கரத்திற் பற்றியிருந்தவில்லை முறித்துத் தள்ளினன். வீரவாகு தேவர் உடனே வேறேவில்லெடுத்து அதில் ஆயிரங்கோடி சரங்களைப்பூட்டி விட்டுப் பாதகன் கரத்தில் விளங்கும் தனுசைக் கண்டிக்கப் பானுகோபன் வேறேவில்லில் ஆயிரம் பாணங்களைத் தூண்டிச் சிவகுமாரன் மார்பைப்புண்படத் தாக்கியபோது அவர்சற் று வருந்தினவராய்க் கோபித்து ஏழு பாணங்களினாற் பானுகோபன் சிரத்தில் விளங்கும் வயிரமுடியைப் பொடிப் பொடியாக்கினார். அவு ணவீரன் மனம் வருந்தி வேறுகிரீடம் ஒன்றைச் சிரத்திலெடுத்து வைக்கு முன்னம் வீரவாகு தேவர்மேலும் பாணங்களை வேகமாகச் செலுத்தி அவன் கவசத்தை அறுத்துத் தள்ளினர். பானுகோபன் வாளிகளையேவி வீரவாகுதேவர் நெற்றியில் உதிரம்பெருகப் பெருங் காயப் படுத்தினன். வீரவாகுதேவர் சிறிதுவருந்தி மனவுறுதியைவி டாமற் பகைவன் முகத்திற்கு ஆயிரம், புயங்கள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி ஆயிரம் பாணங்கள் பிரயோகிக்க அவைகள் அசுரனுடை ய அவ்வத்தானங்களிற் பட்டு உருவிப்போகவே பானுகோபன் மதி மயங்கி வில்லைச்சோரவிட்டுச் சோர்ந்து தேரில் விழுந்தனன்.

இவ்விதமாகச் சூரன் குமாரனுக்குச் சம்பவித்த கேட்டை இரா ட்சத வீரர்கள் கண்டவுடன் மோசம்வந்ததென வருந்தினவர்களாய்க் கோபமீறித் தங்கள் தங்கள் இரதங்களைத் தூரத்தி வந்து வீரவாகு தேவரை வளைத்துக்கொண்டு பிரமாதச்சண்டை விளைக்கத் தலைப்பட் டனர். வீரவாகுதேவர் வந்தநால்வகைச் சேனைகளையும் படைத்தலை வர்களையும் அதப்படுத்தி யுத்தபூமியில் ஒருவரையுங் காணக்கூடாத விதமாய்ச் சங்கரித்துத்தாம் ஒருவர் மட்டும் திரிந்தனர். முன் ஒழி ந்திருந்த பூதப்படைகள் இதைக்கண்ட மாத்திரத்திற் சந்தோஷித்து

இனிநமது இறைவனைச் சேரக்கடவோமென்று ஒருவரை ஒருவர்
கூவி அழைத்துக்கொண்டு களைத்திருந்த படைத்தலைவரும் எண்மரு
ம்இட்சரும் உணர்ச்சி பெற்றெழுந்து வீரவாகு தேவரைச்சேர்ந்து க
ளித்திருந்தனர்.

அக்காலையில் மயக்கிக்கிடந்த பானுகோபனுக்கு உணர்ச்சியுண்
டாகி எழுந்து தன்னைச் சூழ்ந்திருந்த சதுரங்கசேனைப் பெருக்கைக்
காணுதவனுப் வீரசிங்கத்தைப்போல் விளங்கும் வீரவாகு தேவரை
க்கண்டு சூரனென்பது இந்தவீரனுக்கே ஆகும் மற்றவரைச்சொல்
லலாகாதென அவரைக் கொண்டாடிப்பின் ஒரு நாழிகைப்போதில்
இவனைக் கொல்லாமற் போவனேயாகில் நான்வாழமாட்டேன். அவு
ணர் குலத்தவனுமல்லேன். இவ்வில்லுடன் அக்கினிப் பிரவேசமாவே
னென்று பானுகோபன் கொடியபிரதிக்கினைசெய்து ஜெயகாலியாயி
ருக்கின்ற வீரவாகுதேவரைவந்து எதிர்த்துப் பலவிதங்களில் இருவ
ரும் போராடியசமயத்தில் அவுணராஜன் இவனைவில்வித்தையிற் கொல்
வது கூடாதகாரியமென மதித்து முன்சிவபிரானிடம்பெற்ற மோக
ஞஸ்திரத்தை எடுத்துத் தூப தீப நைவேத்தியங்கள் கொடுத்து
விட்டனன். இந்த அஸ்திரத்தின் மகிமைகளைப் பூதப்படைகள் கண்
டவுடன் வாடி மூர்ச்சித்து வீழ்ந்தன. வீரர்களும் தேரைவிட்டுக்கீழே
விழுந்துசேர்ந்தனர். எண்மர்களும்தடுக்க வகையற்றவர்களாய்ச்சோர்
ந்துவீழ்ந்தனர். வீரவாகுதேவா யாதும்தோன்றாது யோசித்திருக்கும்
போது படையானது வேகமாய்ப்பாய்ந்து தேவரை உணர்வழியத்
தள்ளிவிட்டது. அதைச் சூரியகாதகனுகிய வீரன்கண்டு சந்தோஷ
மடைந்து சகலரையும் வென்றேமென்னும் வீறுப்பினுல் இரணக்கள
த்தைச்சுற்றிவந்து சோபித்திருக்கின்ற பகைவர்களையெல்லாம் கண்ட
துண்டப்படுத்தி இதுசமயம் கொல்வேனெனத் தீர்மானித்துத் தனது
வில்லினின்றும் அமோகமாகிய பாணங்களைச்சொரிந்துகொடுமைகளை
விளைவித்தகாலையிற் பாசறைவிட்டிற் பிரமன் விஷ்ணு இந்திரன் முத
லியதேவர்கள்போற்ற வீற்றிருக்கும் சரவணபவன் அதை உணர்ந்தவ
ராய் உடனே ஒரு மோகஞஸ்திரத்தை உன்னிப்பண்ணிப் பானுகோப
ன்விட்ட பாணத்தின் வலியைப்போக்கி வருவாயெனக் கட்டளையிட்டு
விட்டனர். அப்பாணமானது பலவிநோத மகிமைகளுடன் இரணக்க
ளத்தை நெருங்கியவுடன் அசுரன் தூண்டியிருந்த மாயப்படையான

து தனக்குமோசம் நேருமென்று துரிதமாய்ச் சிவகணங்களின் எல்லையைவிட்டுத்தாண்டிப் பானுகோபனிடம்போய்ச் சேர்ந்தது. மாயைப் படையானது விலகவும் வீரவாகுதேவர் முதலினோர் தெளிவடைந்து சண்முகக்கடவுள் அனுப்பிய மோகனாஸ்திரத்தைக்கண்டு ஸந்தோஷசாகரத்தில் மூழ்கிக் கரங்களைக்கூப்பி ஆனந்தவாரிபெருக்கெடுத்தோட ஜெய ஜெய போற்றியெனத் துதித்தனர். மோகனாஸ்திரமானது திரும்பிக் குமாரசுவாமியாரிடம் போய்ச்சேர்ந்தது.

வீரவாகுதேவர் இந்தநிமிஷம் பானுகோபனைக்கொன்று கோபந்தணிவேனென்று தனக்குப் பாலசுப்பிரமணியதேவர் கொடுத்திருந்த பாசுபதாஸ்திரத்தைக் கரத்தில் எடுத்ததைச் சூரன்குமாரன்கண்டு இதனை நினைக்கின்றான். சிவகுமாரன் செலுத்திய மோகனாஸ்திரம் வான்வழிக் கொண்டுவந்ததையும் தம்படை ஓடிங்கித்திரும்பி விட்டதையும் நாம் கண்களாரக்கண்டனம். இனி நம்மாலாவ தென்னவென்று மனதளர்ச்சியடைந்து கோபித்துச் சண்டைகொடுப்பதை மறந்து துக்கசாகரத்தில் அழுந்திப் பின்னும் யோசிக்கின்றான். இப்போது தூதன் பாசுபதாஸ்திரத்தைச் செலுத்துவானாகில் நம்மை அதுதடையில்லாமற்கொன்றுவிடும். அதைத்தடுத்துப்போராட நாம்சிவபிரானிடம் பெற்றபாசுபதத்தையும் யுத்தத்தைச் சுலமாயெண்ணிக் கொண்டுவராமல்வந்தோம். இவனை வேறுவகையினுற் கொல்வது அரிது. ஆகையால் துரிதமாய் நாம் நகரத்திற்குச்சென்று பாசுபதமுதலிய தெய்வப்படைகள் சகிதம்வந்து இவனை ஜெயிக்கவேண்டும். இனி இருக்கிற் கொல்லுவன் என்றுமாயமந்திர மொன்றை உச்சரித்துவானத்திற்பாய்ந்து மேகவடிவாய் மறைந்து மயேந்திரபுரியைச் சேர்ந்தனன். இதைக் கண்டு தப்பியிருந்த இராட்சதரும் ஓடிப்போனார்கள். வானத்திலிருந்த தேவர்கள் முதல்நாள்ஜெயம் நமது நமது என்று வீரவாகுதேவரைப் புகழ்ந்து கொண்டாடி அவர்பேரிற் புஷ்பவருஷம் பொழிந்தார்கள்.

இவைநிற்கப் பானுகோபன் மறைந்துபோனதை வீரவாகு தேவர் பார்த்துப்பாதகன் தப்பிஓடினான். இப்பவும் அவன் உயிர்தப்பிப் போனவனல்ல. நாளையே அவனைச் சமர்க்களத்திற் கொல்லக்கடவேனென்று தமதுதுணைவர் முதலிய பூதவெள்ளங்களுடன் சகலவாத்திய

ங்களும் முழங்கப் பாசறையைச் சேர்ந்து சிவசுப்பிரமண்ய தேவரை நெருங்கிச் சேவித்துச்சகல சங்கதிகளையும் தெரிவித்து மற்றவீரர்களுடன் தாமும்தமது விடுதியிற்போய்ச் சேர்ந்தனர்.

மறைந்துபோன பானுகோபனென்பவன் மிகுந்த துக்கமும் மானமும் கொண்டு தனது அரமனையில் உல்லாசங்களை வெறுத்து நித்திரையில்லாமல் வீரவாகுதேவரை வெல்லும் உபாயத்தைச் சிந்தனை செய்திருந்தான். நடந்த விருத்தாந்தங்களைத் தூதுவர்களாற் கேள்விப்பட்ட சூரபதுமன் கோபங்கொண்டு நாளையத்தினம் நானே அவர்களைவாட்டி வெற்றிகொள்வேனென விடியும் நேரத்தை யெதிர்பார்த்திருந்தினன்.

இரண்டாநாள் சூரபதுமன் யுத்தம்

மறுநாட்சூரன் சூரியோதயத்திற்கு முன்னெழுந்து ஸ்நானமுதலிய கடன்களை முடித்து மந்திரிபிரதானிகள் சேனைத்தலைவர்கள் சூழச் சபாமண்டபத்தில் வீற்றிருந்து தனதுகுமாரனது அபஜெயத்தையும் அதினால் உண்டான பழிப்புரையையும் எடுத்துரைத்துத்தாமே பகைவரை வெற்றி கொள்வதாகத் தூதர்களால் தீவு தீவாந்தரங்களிலிருக்கும் சேனைகளனைத்தையும் ஒருநிமிஷத்திற் கூட்டிவரச்செய்து அப்படித்தமதுபட்டணத்தின் வெளிப்புறம் வந்தடைந்த சேனைப்பெருக்கனைத்தையும் தனது கோபுரத்தின் மேலேறிக் கண்களாரப்பார்த்துச் சத்துருக்களை ஜெயித்ததுபோலும் சந்தோஷமாகித் தானும்போர்க்கோலங்கொண்டு அப்பெரிய சேனைகளுக்குச் சிங்கமுகன் பிள்ளை அதிசூரனையும், தாருகன்பிள்ளை அசுரேந்திரனையும் தலைவர்களாய் முன்னடக்க விட்டுந்தான் இந்திரஞாலத்தேரிற் பிரயாணப்பட்டுப் பின்அணியத்திற் சென்றனன். நூறுயிரவெள்ளம் இராட்சத சேனைகளும் உற்சாகத்துடன் பகைவர்கள் எங்கே எங்கே என்று இரணக்களத்தைத் தேடிவருந்போது இந்திரன் அதைக்கண்டு நடுங்கிக்குமாரதேவரிடம் ஓடிவந்து சேவித்துப்பாதகனாகிய சூரன் சதுரங்க சேனைகளுடன் தேவரீரைப் பகைத்துச் சண்டைகொடுக்கச் சீறிவருகின்றனன். அடியோங்களுக்கு அனுக்கிரகித்திருக்கின்றபடிக்குத் தேவரீர் எழுந்தருளித் தேவர்கள் குலகாதகனை வென்றுபுராதன எங்கள் அரசுரிமை

களையும் பொன்னுலகவாழ்வையும் கடாக்ஷிக்க வேண்டுமெனப் பல வாறுகப் போற்றி இரக்கும்போது குமாரதேவர் இந்திரன் வருத்தத்தைத் திருவுள்ளத்திற் கொண்டு கிருபையாகப் பார்த்தருளித் தேவ ராஜனே! பயப்படவேண்டாமெனக் கையமர்த்தி வாயுபகவான்கொண்டுவந்த இரதத்தில் ஆரோகணித்துப் பலவாத்தியங்கள் முழங்கவும் வீரவாகுதேவரும் தம்பியரும் இலட்சரும் சேனாதிபதிகளும் தங்கள் தங்களுக்கு உரியவாகனங்களில் ஏறிச்சேனைகளின் மத்தியிற்போகவும், குமாரதேவர் இந்திராதியர் சூழ்ந்து போற்றிவரப் பின் அணியத்தில் வருவதாயினர். முதல் அணியமானது இரணக்களத்தைச் சேர்ந்தவுடன் சூரன்சேனைகள் சிறிப் பூதப்படைகளை வளைந்து கொண்டுவீராவேசங்களுடன் அதட்டிப்பின் இருதிறச்சேனைகளும் கைகலந்துகொடிய போரைச்செய்தபோது குவிந்தபிணமலைகள் இருபக்கத்திலும் அளவில்லை. கடைசியிற் பூதவெள்ளங்கள் அவுணவீரர்களை மடக்கிச் சாடி வெற்றி கொண்டுவரும் சமயத்தில் அதிசூரனென்பவன் தனது தேரை முடுக்கிச் சேனைகளுக்கு முன்வந்து தனதுவில்லிற் சரங்களை அபரிமிதமாகத் தொடுத்து விட்டுப் பூதவெள்ளங்களின் உறுப்புகளைச்சின்னபின்னமாகக் கண்டித்தனன். உக்கிரனென்னும் பூதகணத்தலைவன் வந்தெதிர்த்துப் பலவிதங்களிற் போராடச் சிங்கமுகன் பிள்ளை இவனை இனித் தேவப்படைகளால் வெல்ல வேண்டுமென உத்தேசித்து அக்கினி யாஸ்திரத்தை விடுத்தனன். உக்கிரன் பார்த்துச் சிவகுமாரனைச் சிந்தித்துப் போற்றி அவர் அருள்பெற்றுத்திரளாகப்பாய்ந்து அந்த அஸ்திரத்தைப்பற்றி விழுங்கினன். இவ்விதமாகவே அவ்வசுர குமாரன் விட்ட வருணாஸ்திரம் வாயுவாஸ்திரம் பிரம்மாஸ்திரம் நாராயணாஸ்திரம் இவைகளைச் சிவசுப்பிரமணிய தேவர் கடாக்ஷத்தினால் உக்கிரன் விழுங்கி விட்டனன். அது கண்டு அதிசூரன் இவன் தேவாதி தேவனாகிய பரமசிவன் உருவாகக் காணப்படுகின்றதென ஆச்சரியத்துடன் நிற்கின்ற சமயத்தில் உக்கிரன் அரக்கர் சேனைகளைச் சாடத்தலைப்பட்டான். அதிசூரன் பரமசிவனிடம் பெற்ற பாசுபதாஸ்திரத்தை யெடுத்துப் பிரயோகித்ததைக்கண்டு உக்கிரன் தன்கரத்தின் தண்டத்தைக் கீழேபோட்டு ஸ்ரீ பஞ்சாக்ஷரமந்திரத்தை உச்சரித்துப் பரமசிவன் சரணாரவிந்தங்களைத் தியானித்து நின்று விட்டனன். அப்போது அந்தப்பாணம் நெருங்கி வந்து இவன் நிராயுதனா யிருக்கிறானென்று திரும்பிச் சிவபிரானிடம் போய்ச்சேர்ந்தது.

அதிசூரன் வருந்தித் தன் தேரினின்றும் குதித்துப் பாரித்த தண்டம் ஒன்றினால் உக்கிரன் புயத்தில் வந்து மோதினான். அப்படையைப் பறித்து அதிசூரன் மார்பில் திரும்ப உக்கிரன் மோதிய காலையில் அவன் மார்பு பிளந்து பேரொலியுடன் பூமியில் விழுந்து மாண்டனன்.

அதுகண்ட அசுரேந்திரன் சீறித் தன்வில்லிற் கொடிய பாணங்களைத் தொடுத்து விட்டுப் பூதர்களை வாட்டத் தொடங்கினான். அப்போது கனகனென்னும் சேனைத்தலைவன் வந்தெதிர்த்துச் சற்றுபோராடிக்கடைசியில் தாருகன்குமாரன் பாணங்களுக்கு ஆற்றாதவனாய்த் திகைத்து வருந்தி நின்று விட்டனன். அப்பால் உன்மத்தனும் மந்தனும் சிங்கனும் ஒருவன்பின் ஒருவனாக வந்தெதிர்த்துத் தம் வலியை இழந்து வீழ்ந்தனர். இலட்சர்களிற் சேர்ந்த தண்டனும் சோமுஜனும் விஜயனும் ஒவ்வொருவராக எதிர்த்துப்போராடி அசுரேந்திரன் வில்வலிக்கு ஆற்றாதவர்களாய் மயங்கி வீழ்ந்தனர். கடைசியில் இலட்சர்களில் மீந்தவர்கள் அனைவரும் சேர்ந்து அசுரேந்திரனுடன் போராடி அவன் பாணவலிக்கு ஆற்றாதவர்களாய் இரத்தவெள்ளம் பெருகத்திகைத்து ஓடினரென்றால் அவ்வசுர குமாரன் சண்டைத் திறத்தினை என்னவென்று சொல்லலாம்.

இவைகளைக்கண்டு வீரவாகுதேவர் கோபமேலிட்டு அசுரேந்திரன் முன் தன்தேரைத்தூண்டிவந்து அளவிறந்த பாணங்களால் அவன் தேகத்தைத் துளைத்தனர். தாருகன் பிள்ளையும் அவ்விதமே தேவர் தேகத்தைத் துளைத்து அவர் கைவில்லைக் கண்டித்தனன். தேவர், அசுரேந்திரன் வில்லையும் தேரையும் பிளந்தனர். அசுரேந்திரன், தேவர் தேரைக்குதிரைகள் சாரதியுடன் கண்டித்தபோது, வீரவாகு தேவர் கருடனைப்போற் கிளம்பிச் சண்முக தேவரைத் துதித்துத் தமது வாளாயுதத்தால் இராஜகுமாரன் தேரிற் பாய்ந்து அவன் வலது தோளை வெட்டித் தள்ளினர். அசுரேந்திரன் மற்றொருகரத்தில் தண்டமொன்றெடுத்துத் தேவர் மேல்மோத அவர் அதைத்தட்டி விட்டு அவன் சிரசில் உதைத்தனர். அசுரேந்திரன் கோபித்துத் தனது வாளை உருவி வரும்போது தேவர் தனது வீரவாளினால் அவன் சிரம் அற்று உருள வீசினர். அவன் பூமி பிளக்க விழுந்து மாண்டனன். தேவர்கள் தம் கரங்களைத்தட்டி ஸந்தோஷித்துத் தேவர்பேரிற் புஷ்பமாரி சொரிந்தார்கள்.

சூரனானவன் குமாரர் இருவரும் இறந்ததையும்சமுத்திரம்போல் எங்கும் நிறைந்த சேனைகள் மாண்டு மற்றவர்கள் பறந்தோடியதையும் தெரிந்து ஆலம்போற் சிறித்தனது இந்திர ஞாலத்தேரை முடுக்கி, முன் அணியத்திற்கு வந்து தனது மகிமையுள்ள தனுசைவளைத்துக் குணத்தொனியை எழுப்பிய காலையில் அந்த ஓசையானது அண்டபுவனகோடிகள் அனைத்தினும் பன்னிரண்டு தேவவருஷகாலம் முழங்கிக் கொண்டிருந்ததென்றால் அதைக்குறித்து நாம் இங்கு விஸ்தரித்துப் பேசத்தக்கது என்ன இருக்கின்றது! பூதப்படைகளும் அவ்வோசைக்குப்பயந்து பறந்தோடின. படைத்தலைவர்களாகிய நூற்றெண்மரும் தயிரியசாலிகளாய் மேலிட்டுவந்து பருவதங்கள் மரங்கள் தண்டாயுதங்கள் முதலிய படைகளைச் சூரன் பேரிற் பிரயோகித்தார்கள். அவைகளை எல்லாம் சூரன் துகள்படச்செய்து அவர்களையும் திகைத்துப் பரந்தோடி ஒளிக்கச் சாடினான். அதுகண்ட நூறாயிரம் அணித்தலைவர்களெல்லாரும் வந்தெதிர்த்துப் போராடுவதைச் சூரன் பார்த்து அனேக பாணங்களால் அவர்களையும் சின்ன பின்னப்படவாட்டி யோட்டினன். நவவீரர்களில் ஒருவனாகிய வீரமார்த்தாண்டன் சூரன் முன் பாணங்களைப் பொழிந்தபோது அசுரன் அவைகளைப் போக்கி அவன் நெற்றியிற் காயப்படச் செய்தனன். வீரமார்த்தாண்டன் பின்னும் பாணங்களைப் பிரயோகிக்கச் சூரன் அவன் கரத்தின் வில்லை கண்டித்து மார்பையும்பிளக்க அவன் பதைத்து விழுந்தனன். இச்சம்பவத்தை வீரராக்கதன் கண்டுவந்து பாணங்களைப் பொழியச் சூரன் அவன் வில்லைக் கண்டித்தனன். அவன் உடைவாளாற் சூரன் வில்லிற் பாய்ந்து வெட்டியபோது அதற்கு அது சற்றும் காயப்படாமல் இவன் வாளாயுதம்தான் பொடியாகிப் போயிற்று. அப்போது வீரராக்கதன் தன்கையால் ஓங்கி அவன் மார்பில்அறைய எத்தனப்படுவதைக் கண்ட சூரன் நிராயுதனைக் கொல்லப்படாதெனத் தன்கால் விரலினால் எற்ற அவன் அண்டப்பித்திகையிற் போய்முட்டித்திரும்பிப் பூமியில் வந்து விழுந்து சோர்ந்தனன். இந்த அபாயத்தைக்கண்ட வீரமாமகேந்திரன் எதிர்த்துவந்து பாணங்களை விடுத்தான். சூரன், அவன் புயத்தையும் மார்பையும் பத்தலாகக்கிழிக்க அவன் சோர்ந்தனன். அதைக்கண்ட வீரதீரன்வந்து போராடச் சூரன் அவன் தேரைப்பொடியாக்கினான். வீரதீரன் தண்டத்தை எடுத்து ஓடிவரும்போது சூரன் அதைப்பொடிசெய்து அவன் மார்பையும் பத்தலாகக்கிழித்த

வுடன் அவன் சோர்ந்து விழுந்தனன். இதை வீரமாமகேசன் கண்டு வேலாயுதம் ஒன்றெடுத்துச் சூரன்மேரிற் பிரயோகித்தான். சூரன் அனேக பாணங்களை விட்டும் அவைகளை அது விழுங்கிக் கொண்டு வந்து அவன் மார்பிற் பாய்ந்து மழுங்கி விழுந்தது. அப்பாற் சூரன் கோபங்கொண்டு மறுகணையால் அவன் மார்பைப் பிளந்து வீழ்த்தினன். வீரகேசரி பின் வந்தெதிர்க்கச் சூரன் அவன் கரவில்லையும் தேர் குதிரை சாரதிகளையும் கண்டித்து அவன் நெற்றியிலும் காயப்படுத்தினன். வீரகேசரி பெரிய பருவதத்தைப் பிடுங்கி எறிந்தான். சூரன் அதைப் பொடிசெய்து அவன் மார்பைத்துளைத்தான். உடனே அவன் சூரன் பேரிற் பாய்ந்து தனது கரத்தால் ஓங்கி அவன் மார்பில் அறைந்தவளவில் வீரராக்கதன் கரமானது பத்தலாய்த் தெறிக்க அவன் சோர்ந்து விழுந்தனன். அவனைச் சூரன் எடுத்துத் திருப்பாற் கடலில் விழ வீசி எறிந்தனன். பின் வீரமாபுரந்தரன் வந்தெதிர்த்துத் தருமராஜன் படையை விடுத்தான். அது வேகமாய் வந்து சூரன் மார்பிற் பட்டுத்தன் வலிகுன்றித் திரும்பி விட்டது. இவைகளாற் சூரன் வரப்பிரசாதங்களைத் தெரிந்து கொள்வீராக, அப்பால்வீரமா புரந்தரன் பிரமாஸ்திரத்தை எடுத்த காலையிற் சூரன் விரைந்து விட்ட பாணங்களால் அவன் மயங்கி விழுந்தனன். அதைக்கண்ட வீரராக்கதன் வந்தெதிர்க்கச் சூரன் அனேக பாணங்களை ஏவினன். அவைகள் அவன் விட்ட பாணங்களுக்கும்மேற் கொண்டுபோய் அவன் மார்பிற் பட்டுருவிப்போக அவனும் சோர்ந்து விழுந்தனன்.

இவைகளைப் புயவன்மை யுடைய வீரவாகுதேவர் கண்டு கோபங்கொண்டு தனது தேரைத்தூண்டி முன்வந்தனர். சூரன் அவருடைய சுந்தரவடிவைக்கண்டு இவன் ஆதியில் தன்னிடம் தூதாகவந்தவனென்றறிந்து கோபித்து இதனைச்சொல்லுகின்றான். அடாபயலே! பெருமையுடைய வீரமா மயேந்திரபுரத்தை நாசம் பண்ணிக்கணக்கிறந்த இராக்ஷதரைக் கொன்று சற்றும் பயமில்லாமல் என் அரிய குமாரனையும் கண்ட துண்டமாகவெட்டிமாய்த்துத் தப்பிப் பிழைத்துப்போன உனக்கு இப்போது நாள் குறுகியபடியால் என்முன்னம் வந்தனை. இதோ உன்பிராணனை எமலோகத்திற்கு அனுப்புவேன். சண்டைக்கு ஆபத்தப்படக்கடவாயெனச் சொல்லிமுடித்தவுடன் தேவர், நீ பற்பலவிதங்களிற் பேசியாவதென்ன? எமது இறைவனுகிய பா

லசுப்பிரமணிய தேவர் பரிபூரணகடாக்ஷத்தினால் எனக்கு அரிதாகிய
காரியம் ஒன்றும் இருக்கமாட்டாது. துரிதமாய்ச் சண்டைக்குவரக்க
டவாயென்று சொன்னமாத்திரத்திற் சூரன் அதிகக்கோபங்கொண்டு
ஆயிரங்கோடி பாணங்களைத் தேவர்மேற் பிரயோகித்தனன். அவை
களைத் தேவர் கண்டித்தனர். சூரன் பின்னும் பாணங்களை அமோக
மாய்ப் பிரயோகித்தனன். தேவர் பின்னும் அவைகளைக்கண்டித்து
வேறு பாணங்களைச் சூரன் நெற்றிக்குக் குறிபார்த்து விட்டபோது
அவைகள் வந்து அவன் நெற்றியில் தைத்து முனைகள் ஒடிந்து துகள்
பட்டு விழுந்தன. இதனைத்தேவர்கண்டு நமது பாணம் இதுவரைதாக்
கிய காலத்திற் காயப்படுத்தாமற் போனதில்லை. ஆதலாற் சண்முகப்
பெருமாள் திருக்கரத்தில் விளங்கும் வெற்றிவேலன்றி மற்றெவ்வித
ப்பாணங்களினாலும் இவன் வச்சிரதேகத்தைப் பின்னப்படுத்தச் சாத்
தியப்படாதென நிச்சயித்து, என்னாற் கூடியவரை போராடுவேனெ
ன்று தமது பாணங்களாற் சூரன் தேகத்தை மறைத்தனர். சூரன்
அவைகளை விலக்கி வேறுஏழு பாணங்களினால் தேவர் புயங்களைத்
துளைத்தனன். அவர் வருந்திப் பின் தயிரியம்விடாமற் சூரன் சாரதி
யைச் சல்லடைக்கண்களாகத் துளைத்தனர். அதைக்கண்ட சூரன்தே
வரின்தேர் குதிரைசாரதியைக் கொன்று கர்ச்சித்தனன். உடனே
தேவர் வேறுதேரேறி வாயுவாஸ்திரத்தைப் பிரயோகித்தனர். சூரன்
தனது வில்லையூன்றிக் கொண்டிருந்தபோது அவ்வஸ்திரம் அவன்
மார்பில்தாக்கிப் பொடியாகி வீழ்ந்தது தேவர்உடனே அக்கினியாஸ்
திரத்தை விடுத்தனர். அதுசூரன் மேற்பட்ட மாத்திரத்திற் பொறி
ந்து வலியற்றுப் போனது. தேவர் இயமனாஸ்திரத்தை விடுத்தனர்.
அது சூரன் மார்பில் தாக்கித் தன்வலி இழந்து போனது. தேவர்
சூரியாஸ்திரத்தைச் செலுத்தியபோதும் அதுவும் சூரன்பேரிற்பட்
டுப் பலிதமின்றிப் போனது. இவைகளைக் கண்டதேவர் அதிசயித்த
வராய்ப் பின்னும் வருணாஸ்திரம் இந்திராஸ்திரம் நிருதாஸ்திரம் இத்
தமூன்று பாணங்களையும் சேர்த்துப்பிரயோகம் பண்ணினார். அவை
களும் சூரன்பேரிற் போய்த்தாக்கி உருத்தெரியாமல் துகள்பட்டுப்
பறந்துபோயின. தேவர், கோபத்துடன் குபேராஸ்திரம் மாயாஸ்தி
ரம் இரண்டையும் சேர்த்து விடுத்தனர். அவைகளும் சூரன் மார்
பிற்பட்டுத் தங்கள் பெருமைகள் அழிந்து திரும்பின. தேவர் இன்
னும் இவன் வலியை அறிவோமென்று பிரமாஸ்திரத்தையும் நாராய

ணாஸ்திரத்தையும் சேர்த்துப் பிரயோகித்தனர். அவைகளும் அவன் மார்பைத் துளைத்துப் பயன் பெறாமல் திரும்பின. இச்சம்பவங்களைத் தேவர் பார்த்துச் சிவபிரான் அவனுக்குக் கொடுத்தவரத்தை நினைந்து அதிசயித்துச் சூரனென்பது இவனுக்கே தகுமென்று பலவிதங்களாய் யோசித்திருக்கும்போது சூரன் நகைத்து அடா தூதனே! உன் சாமர்த்தியம் இவ்வளவு தானோ! இன்னம் உண்டோ! இனி உன்னை இதோ கொல்லுகிறேனென்றபோது தேவர் மிகக் கோபங்கொண்டு பாசுபதாஸ்திரத்தை யெடுத்து விட்டனர். அது கிளம்பி இன்னும் அனேகம் தேவப்படைகளையும் படைத்துக்கொண்டு ஊங்காரித்து வரும்போது சூரன் கண்டு இதை மற்றப் படைகளைப் போலச் சாமானியமாய் விட்டிருக்கலாகாதெனத் தானும் தன் பாசுபதாஸ்திரத்தைப் பிரயோகித்தனன். இருபடைகளும் எதிர்த்துப் பிரமாதயுத்தம் செய்யத்தொடங்கிய காலத்திற் பிரபஞ்சங்கள் அனைத்தும் அதலகுதலப்பட்டு வாடுவதைப் பிரமனாதியர் கண்டு அவ்வஸ்திரங்களைத் துதித்து, ரெட்சிக்கவேண்டுமெனப் போற்றுவதை அவைகள் தெரிந்து உடனே அடங்கிதம்மை விடுத்தவர்களிடம் போய்ச்சேர்ந்தன. அப்போது சூரன் நகைத்துத்தேவரைப்பார்த்து இன்னம் உன்வீரத்தைக்காட்டென்று கோடி உக்கிரபாணங்களைப் பிரயோகித்தனன். தேவர் அவைகளைக் கண்ட துண்டமாக்கினர். சூரன்வெகுண்டு முத்தலைப் பாணத்தால் தேவர் வில்லைத் துண்டமாக்கினன். தேவர் வேலொன்றைவிட்டனர். அது சூரன் மார்பிற்பட்டுப் பொடியாகியது சூரன் பாரித்ததண்டமொன்றை எடுத்துச் சுழற்றி யெறிந்தனன். தேவர் தன் தண்டத்தைப் பிரயோகிக்க அது இராட்சதராஜன் வச்சிரதண்டத்துடன் போராடிப்பொடிப்பட்டு வீழ்ந்தது. பின்பகைவன் தண்டமானது மேலிட்டு வந்து நமது தேவரின் மார்பிற்கோடை யிடியைப்போலத்தாக்க, அவர் சரீரமுற்றும் கலங்கித் தேவர்கள் புலம்பியோடத் தேரில் மெல்லச் சாய்ந்தனர். சூரன் ஸந்தோஷத்துடன் பூதப்படைகளையும் சின்ன பின்னப்படுத்தி வாட்டப்பிரயத்தனப் பட்டபோது அவர்களில் இறந்தவர்கள் போகமற்றவர்கள் ஓடி ஒளித்தனர்.

இவைகளைச் சண்முகப்பெருமாள் பார்த்து வாயுதேவனைக் குறிக்க அவன் இரதத்தைத்தூண்டிச் சூரன் முன் நிறுத்தினன். எமதுஇறைவனாகிய பாலசுப்பிரமணியக்கடவுளைச் சூரன் நிஜ தெரிசனையாக

காணப்பெற்ற படியால் அவன் செய்திருக்கின்ற தவங்களின் முயற்சியை எத்தகையராலும் கணித்துப் பேசக்கூடுமோ? அவனுக்கு இனி எப்படியானாலும் ஒரு குறை உண்டாயிருக்கக் கூடியதோ? சூரன் குமாரக்கடவுளைத் தெரிசித்தவுடன் பரமேஸ்வரர் குமாரனாகும் இவனென நிதானித்துக்கொண்டு, சுவாமியைப் பார்த்து இதனைச் சொல்லுவான். ஓ! குமாரனே! நீ ஒருவனே சூரன் என்னும் பேர்படைத்த என்னை வெல்வதாகக் கருதி வந்தனை? உன் பிதாவாகிய பரமசிவனும் மகாவிஷ்ணுவும் பிரமனும் என்னுடன் போர்செய்ய நினையாமலிருக்கும்போது நேற்றுப்பிறந்தபாலனாகிய நீயோ என்னிடம் சண்டை கொடுக்கத்திறமுடையவன்? எனது பிரதாபங்களை முன்பின் யோசியாமல் ஏதோ சில வீரரைக்கொன்று விட்டோமென வெண்ணி மமதைகொண்டு என்முன் வந்தனைபோலும்? இதோ உன் பாலசேஷ்டைகளையும் விருப்பையும் அடக்கி வாட்டுகிறேனென்று சூரன் சொன்னதைக் குமாரதேவர் கேட்டுக் குறுஞ் சிரிப்புடன் இதனைப் பேசுவதாயினார். உனது சகலபெருமை களையும் நினைத்து நீ கருவங்கொள்ள வேண்டாம். நாம் அவைகளைச் சிலபோதில் அழித்துவிடவல்லோம். சிவபிரானது நுதல்விழிச்சிறுபொறி ஒன்று சராசரப்பிரபஞ்சங்க ளனைத்தையும் தகித்து அழிப்பதை நீ கேள்விப்பட்ட தில்லையோ? சுத்தவீரர் இளைஞரென்றும் முதியரென்றும் உண்டோ? உன்விழிகளுக்குப் பாலனாகத் தோற்றுகின்ற நாமே வில்வன்மையினால் உன்னை அடக்கி நாசஞ்செய்யக் கடவோமென்று திருவுளம்பற்றியபோது, சூரனுக்கு அதிகக் கோபமுண்டாகித் தனதுபெருத்து நீண்டவில்லை எடுத்துக்குணத் தொனிசெய்தான். குமாரதேவரும் தமது வில்லைக் குணத்தொனி செய்தனர். அதனைக்கேட்ட சூரன் கரவேகமாய்க் கோடிபாணங்களைச் சோனைமாரிபோற் சொரிந்து சுவாமியை இரதத்துடன் மறைத்து விட்டனன். குமாரதேவர், தமது பாணங்களினால் அவைகளைப் போக்கினார். உடனே சூரன் அபரிமிதமான பாணங்களைப் பிரயோகித்துக் கொக்கரிக்கக் குமாரசுவாமி யானவர் அவைகளைக்கண்டித்து மேலும் சங்கையற்ற பாணங்களைத் தூண்டிச் சூரனை மூடினார். சூரன் அவைகளை விலக்கிப் பற்களைக் கடித்துக் கோடா கோடிபாணங்களைப்பூட்டிச் சிவகுமாரன் பேரிற் சொரிந்தான். அவைகளைக் குருபரன் போக்கிச் சக்தி

யையொத்த ஏழுபாணங்களை ஏவினர். அவைகள் சூரன் புயங்களிற்பட்டு உருவச்சக்தியற்றுத் திரும்பிவிட்டன. இதைலோகநாயகன் கண்டு நகைத்திருக்கும் போது சூரன் கோபித்துச் சரங்களைச் செலுத்தி மேலிட்டு வருவதைக்கண்டு அவைகளைப்போக்கித்தாம் வேறு ஆயிரம் அர்த்தசந்திர பாணங்களாற் சூரன் கரத்தினது வில்லைப் பிளந்தெறிந்தனர். அப்போது சூரன் பிரமன்படையை வீசினன். சரவணபவன் அதைக்கண்டித்துமேலும் சரங்களைச் செலுத்தி மூட, சூரன் வேறுவில்லெடுத்து அவைகளைப் பறக்கடித்து வேறே ஏழுபாணங்களைச் சண்முகநாதர் புயங்களுக்குக் குறிவைத்து விட்டனன். அவைகள் சுவாமியின் தோள்களில் தாக்கிப் பொடியாகி வீழ்ந்தன. அப்போது சூரனது வில்வலிமை வெகு நேர்த்தியென்று முருகக்கடவுள் வேறுபாணங்களினால் அவன் கரவில்லைக் கண்டித்துத் தேரை அசையவொட்டாமல் தடுத்துப் பக்கத்துக்தேர்களையும் சிதைத்துப் பின்னும் பலபாணங்களையேவும் கரவேகத்தைச் சூரன் கண்டு வடவைபோற் சீறி முத்தலைச் சூலத்தை வீசினன். சுவாமியானவர் அதை இரண்டாக வெட்டித்தள்ளி மேலும் பலபாணங்களை யேவித் தேரின் பேரில் விளங்கும் குடைகளையும் கண்டித்துச் சூரன் அணிந்திருந்த ஆபரணாதிகள் முழுமையும் பொடிப் பொடியாகப் பின்னப்படுத்திச் சாடி வரும்போது சூரன் மதிமயங்கித் தனக்குச் சம்பவித்த மானபங்கத்தை நினைந்து நினைந்து தலையிறங்கி வருந்துகின்றதை அவுணச் சேனைத்தலைவர் கண்டு இப்பாலனைக்கொன்று பழி தீர்ப்போமென்று சதுரங்க சேனைகளுடன் ஏக முகமாய் வந்து குமாரசுவாமியை வளைத்து அமோகமாகிய பாணங்கள் முதலியவைகளைப் பிரயோகித்த காலையிற் சிவகுமாரர் தமது திருக்கரங்களினொன்றில்விளங்கும் சக்கரத்தை விடுத்தனர். அது ஜொலித்துக்கொண்டு சேனாசமுத்திரத்திற் பாய்ந்து எங்குந்தானாய் உலாவிச் சூறாவளிக்காற்றினும் கடுகித்திரிந்து சூரன் சேனைப் பெருக்கைச் சின்னப்படுத்தி வெளியிடமாக்கியது. இவ்விதம் பாலசுப்பிரமணிய தேவர் ஏவிய சக்கரப்படையானது ஜெயப்பிரதாபத்துடன் வானகங்கையிற் படிந்து குமாரதேவர் திருக்கரத்தில் வந்தமர்ந்தது. சூரன் இதைக் கண்ணாரக்கண்டு பிரமித்து இதுவென்ன அதிசயம்! நாங்கள் கற்ற தனுர்வித்தையும் புஜபலபராக்கிரமங்களும் வரப்பிரசாதங்களும் இந்தச் சின்னக்குழந்தையின் முன்னம் அபல

மாகப் போயினவே என்று மங்கிலியத்தை இழந்த கன்னியைப்போலவும் துதிக்கையை யிழந்த யானையைப்போலவும் கண்ணிழந்த குருடனைப்போலவும் வாடிப் பூமியாகிய தேர்மீது இருந்தனன்.

அதன் பின்பு சூரனுக்கு அதிகக்கோபம் உண்டாகி நல்லகாரியம், பற்கள்முழுதும் விழுந்தின்னம் முளையாதபாலகன் வெற்றியும் நமது சூரமும் வெகு நேர்த்தியாக விருக்கிறதென்று பிரம்மாஸ்திரத்தை எடுத்துவிட்டனன். அது சமீபித்தவுடன் சிவகுமாரன் திருக்கரத்தில் விளங்கும் வெற்றிவேலானது சரேலென்று எழுந்து மீறி வருகின்ற அந்தப் பாணத்தைக் கவுளீகரம் செய்து தன்னிலையில் நின்றது. அதைச் சூரன் கண்டு நாராயணாஸ்திரத்தை எடுத்து விடுத்தனன். அதையும் வெற்றிவேலானது பாய்ந்து விழுங்கி விட்டது. அப்பாற் சூரன் பாசுபதத்தைப் பிரயோகித்தனன். அதைச் சிவகுமாரன் கண்டு இது நமது பிதாவின் படையாகுமென நிதானித்தவராய்த் தமது திருக்கரத்தினை நீட்டிக் கொடுத்தவன் பின் எளிதில் வாங்குமாறுபோல ஏந்தி மற்றப்படைகளுடன் தரித்திருந்தனர். இந்த அதிசயங்களைச் சூரன் கண்டு இனிப்பாலன் செய்கையை அறிவோமென்று மவுனியாய் அசைவற்று நின்றனன். அகன்ற மண்டலாதீஸ்வரனாகிய சூரன் நிலையைச் சண்முகப்பெருமான் கண்டவுடன் மனதில் இரக்கமுற்றுக் கிருபாநிதி யாகையால் இதனைச் சொல்வதாயினர். ஓ! சக்கிரவர்த்தி! இந்திர குமாரன் முதலாகிய தேவர்களை அலைத்துப் பிடித்து வந்து அளவற்ற காலமாய்க் கொடிய சிறையில் வைத்து வருத்துகின்றனை எனத்தெரிந்து அதை நிவாரணம் செய்யும் பொருட்டு நாம் ஒரு தூதனை அனுப்பினோம். அவன் வந்து பேசியவார்த்தைகளை உறுதியாகக் கொண்டு நடந்தவனுமல்ல. இந்தக் காரணத்தைக் குறித்தே திருக்கயிலையை விட்டு வந்தோம். ஆகையால் நீ இனிமேலாயினும் தேவர்கள் சிறையை விடுதலை செய்வாயாயின் உன்பிராணனை வாங்காமல் இந்தச் செல்வத்தை அனுபவித்திருக்க விட்டுப்போவோம். இல்லாவிட்டால் உன்னைக்கண்டித்து அவர்களை மீட்டுக்கொண்டு போவோம். இனி உன் எண்ணத்தைத்துரிதமாகச்சொல்லக்கடவை என்றனர். அப்போது சூரன் மாறுத்தரம் கொடாமல் இதனை எண்ணுகின்றான். இந்தச் சிறுபாலகன், நாம் செலுத்தும் படைகளையும் சேனை